Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

றெனி

பல், மூக்குக் கண்ணாடியகம்

- கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள
- உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
- மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்துகொள்ள

நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

கண்டி வீதி, சாவகச்சேரி.

பிரதான வீதி, பருத்தித்துறை

540, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 17 (10.01.2004) சனிக்கிழமை இதழ் :101

# சமாதான முயற்சியை தொடரும்படி பணிக்க ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அதிகாரம் இல்லை!

## அமைச்சரவைப் பேச்சாளர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

**சமாதான முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு பிரதமரைப் பணிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது என அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் மற்றும் அதிகாரமற்ற தன்மை போன்ற பல்வேறு சிக்கல்களையடுத்தே, விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கைவிடும் நிலைப்பாட்டுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வந்தார்.

சமாதானப் பேச்சின் அடித்தளமாக இருப்பது யுத்தநிறுத்த உடன்படிக்கையாகும். அது எதுவித பயனுமின்றிக் கிடக்கும்போது, பேச்சுக்களும் தொடரமுடியாமற் போய்விடும். இப்படியே சமாதானப் பேச்சுக்கள் இழுபட்டுச் செல்லுமானால், புரிந்துணர்வு உடன்படிக்கையும் செயலற்றுப்போய்விடும்.

அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றமை குறித்து எமக்கு எதுவித கவலையும் கிடையாது. ஜனாதிபதி நோர்வே தரப்புடன் பேசி சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள முடியும்.

சமாதானப் பாதையில் காணப்படும் தடைகளை நீக்கி பிரதமருக்கு உதவிபுரிவதன் மூலம் நாட்டில் சமாதானத்தை உருவாக்கி அமைதியைப் பேணமுடியுமே தவிர, பிரதமரை சமாதானத்தைத் தொடருமாறு ஜனாதிபதி பணிக்கமுடியாது.

சமாதான முயற்சிகள் கைவிடப்படுமானால் ஏற்படக்கூடிய அபாயநிலையைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதி செயற்படத் தவறினால்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடா அபிவிருத்தி குறித்து அரச அதிபருடன் ஒஸ்ரின் பேச்சு!

(யாழ்ப்பாணம்)

இந்த வருடம் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான அதிகாரிகள் மட்ட இரண்டாவது கலந்துரையாடல் நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்றது. பிரதமரின் ஆலோசகர்களான ஒஸ்ரின் பெர்னாண்டோ, எஸ்.சிவானந்தன் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் திணைக்களத் தலைவர்களும், வங்கிப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சிலிருந்து விலகும் எண்ணத்தை பிரதமர் ரணில் கைவிடவேண்டும்!

### வர்த்தக சமூகத்தினர் வேண்டுகோள்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளிலிருந்து விலகும் எண்ணத்தை பிரதமர் ரணில் கைவிடவேண்டுமென இலங்கை வர்த்தக சமூகம் கேட்டுள்ளது.

வர்த்தக தொழில் மையங்களின் பணிப்பாளர்களை உள்ளடக்கிய ஒன்றிணைந்த வர்த்தக சமூகம் நேற்று கொழும்பில் கூடி எடுக்கப்பட்ட தீர்மானத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின்மீது அக்கறை கொண்டுள்ள பிரதமர், சமாதான முயற்சியிலிருந்து விலகக் கூடாது. அதேவேளை, ஜனாதிபதி தனது முரண்பட்டபோக்கை மாற்றிக்கொண்டு சமாதான முயற்சிக்கு ஒத்துழைக்கவேண்டும்.

பிரதமரின் சமாதான முயற்சிக்காக தனியார் துறையினர் ஒத்துழைக்கக் காத்திருக்கின்றனர். இத்னை அனைத்து தனியார் துறையினரும் ஒத்துநின்று வெளிப்படுத்தவேண்டும்.

பிரதமரும், ஜனாதிபதியும் இணைந்து செயற்படுவதிலேயே நாட்டின் அமைதியும், நிம்மதியும் தங்கியுள்ளது. இதனை உணர்ந்து இருவரும் செயற்படவேண்டும்.

சமாதானப் பாதையில் முட்டுக்கட்டை போடுதல் எம்மை நாமே அழித்துக்கொள்வதற்குச் சமனானது. மக்களின் எதிர்பார்ப்பையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் வைத்து பாதாள உலகத் தலைவர் சுட்டுக் கொலை!

### கொலையாளி இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்



கொலைச் சம்பவம் இடம்பெற்ற இடம்.



பயன்படுத்தப்பட்ட கைத்துப்பாக்கி

(கொழும்பு)

கொழும்பு - புதுக்கடை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பாதாள உலகக் கோஷ்டி ஒன்றின் தலைவரான தம்மிக்க அமரசிங்க சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரைச் சுட்டுக்கொன்றவர் இராணுவத்திலிருந்து தப்பிச்சென்றவர் என விசாரணைகளின் மூலம் தெரியவந்திருப்பதாக கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது -

பொரளையில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக நீதிமன்ற விசாரணைக்காக சிறைச்சாலையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த தம்மிக்க அமரசிங்க கொழும்பு - புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் விசாரணை முடிந்து சிறைச்சாலை அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்படுகையில், கைத்துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதேவேளை - இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது மேலும் இருவர் காயமடைந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிரதிநிதிகளுடன் யாழ்.படைத் தளபதி சந்திப்பு!



சந்திப்பு முடிந்து திரும்பும் இராணுவத் தளபதி



சந்திப்பில் கலந்துகொண்ட செம்மணன், வீமன்.

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவுக்கும் இடையிலான முதலாவது சந்திப்பு நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் போது, பல முக்கிய விடயங்கள் தொடர்பாக நீண்ட நேரமாக பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில், விடுதலைப் புலிகளின் சார்பில் யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன், தளபதி வீமன் மற்றும் அரசியற்துறை போராளிகளான இமையவன், மணிவண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 193 தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனங்கள் இரத்து!

### முறைகேடுகளே காரணமென கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதியில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்களில் 193 பேருக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனங்கள் இரத்துச் செய்யப்படுவதாக கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது.

இது தொடர்பாக கல்வி அமைச்சு மேலும் தெரிவித்ததாவது -

193 பேருக்கான வெற்றிடங்கள் இருந்து அண்மையில் நிரப்பப்பட்டது. ஆனால் இந்த நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சைக்கு 700 பேர்வரை சமுகமளித்திருந்தனர். இந்த நியமனங்களை வழங்கும்போது முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. மிக நீண்டகாலமாக தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய எவரும் இதில் கவனிக்கப்படவில்லை. எனவே இந்த நியமனங்கள் சிபார்சுகளின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளதால், அவை

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297

071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

(சி-2009) email :- jaffna @ expoavi. com, reservations @ expoavi.com.

எக்ஸ்போஎயார்

வான் வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR

your friend in the skies...

# புனரமைக்கப்பட்டுள்ள யாழ்.பொது நூலகத்தை மக்கள் பாவனைக்காக உடனடியாகத் திறக்கவும்!

## மாநகர ஆணையாளருக்குக் கடிதம்

புனரமைக்கபபட்டுள்ள யாழ்.பொது நூலகத்தை பொது மக்களதும், மாணவர்களதும் பாவனைக்காக உடனடியாகத் திறக்க ஆவண செய்யுமாறுகோரி சி.வி.கே. சிவஞானம், யாழ். மாநகர ஆணையாளருக்கு மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ் பேசும் மக்களின் அமையத்தினுடாக கடிதமொன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திருத்தம் செய்து புனரமைக்கப்ட்ட யாழ்ப்பாண பொதுநூலகம், கடந்த வருட முற்பகுதியில் திறந்து வைக்கப்பட விருந்தபோதும் சில வேலைகள் பூர்த்தியடையாததால் அவ்வாறு செய்யப்படவில்லை.

எனினும், 2003.12.31ம் திகதியில் எஞ்சிய வேலைகளில் அநேகமானவை பூர்த்தி செய்யப்பட்டு கட்டடம் தங்களிடம் கையளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

1981.06.01 ஆம் திகதி எரியூட்டப்பட்ட நூல் நிலையத்தின் தென் பகுதி கட்டடம் அந்த கொடூர நிகழ்வின் நினைவாக பேணப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் திருத்தம் செய்யப்படாமல் விடப்பட்டிருந்தது. அதனாலேயே நூல் நிலையத்தின் மூன்றாம் கட்டடமான மேற்குப்புறம் புதிதாக அமைக்கப்பட்டு 1984.06.04. ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

1985.5.10. ஆம் திகதியும் சிறிலங்கா அரசின் ஆயுதப்படையினரால் இந்த பொது நூலகம் மீண்டும் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. அதனால் நூலகம் மீண்டும் செயலிழந்தது.

அழிவின் சின்னமாக, திருத்தம் செய்யப்படாது விடப்பட்ட தெற்குப் பகுதியும் திருத்தியமைக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இது அரச படைகளின் தமிழர் கலாசார படுகொலையை மறைக்க எடுக்கப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கையாகவே கருதவேண்டியுள்ளது.

எது எவ்வாறாயினும் பாரிய செலவில் அநேகமான பனரமைப்பு வேலைகள் முடிவடைந்த நிலையில் இந்த நூலகத்தை பொதுமக்களதும் மாணவ சமூகத்தினதும் பாவனைக்கு விடப்படாமை பொருத்தமானதல்ல, விரும்பத்தக்கதுமல்ல.

இதேவேளை - சம்பிரதாயபூர்வமான திறப்புவிழா ஒன்றை இனி எப்போது மேற்கொண்டாலும் அது அரசியல் கலந்த சர்சைக்குரியதாகவே அமையும். ஒருவகையில் ஏற்கனவே இயங்கிய ஒரு நூலகத்திற்கு திறப்பு விழா தேவையற்றது எனவும் கொள்ளலாம்.

2004.01.15 ஆம் திகதிக்கு பின்பு பொருத்தமான ஒரு நாளில் யாழ்ப்பாண பொதுநூலகம் பொதுமக்களதும், மாணவர்களது பாவனைக்கும் திறந்திருக்கும் என ஊடகங்கள் மூலமாக அறிவித்தல் வெளியிட்டு நூலகத்தை இயக்க வைக்கவேண்டும்

லயனல் பெர்ணாண்டே விசாரணைக் குழுவின் சிபார்சின்படி வழங்கபபட வேண்டிய மிகுதி 85 லட்சம் ரூபா நட்ட ஈட்டை சேர்ந்த வட்டியுடன் உடன் வழங்குமாறு ஜனாதிபதி அவர்களைக் கோரவேண்டும்.

நூலக அழிப்பின் வரலாற்று நினைவகம் உருவாக்கப்பட்டு இவை தொடர்பான தகவல்களையும் தரவுகளையும், ஆவணங்களையும் பேணிக்காக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

எனவும் அந்தக் கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருமறைக் கலாமன்றம் நடத்தும் ஓவிய, சிற்பக் கண்காட்சி ஆரம்பம்!

திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக் கலைவட்டம் நடத்தும் ஓவிய சிற்ப கண்காட்சி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்றுக் காலை 10.00 மணியளவில் திருமலைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யே. ராஜ்குமார் தலைமையில் ஆரம்பமானது. சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஓவியர் ரமணி கண்காட்சியைத் திறந்துவைத்தார்.

பின்னர் அவர் உரையாற்றுகையில், இவ்வாறான கண்காட்சியை தொடர்ந்தும் நடத்த வேண்டும், இதன மூலம் புதிய கலைஞர்களை இவ்வாறான நிகழ்வுகள் மூலம் வெளிக்கொணரமுடியும். கண்காட்சிகளை நடத்துவதனால் மக்கள் மத்தியில் விழிப்புணர்வும், பல அறிமுகங்களும் ஏற்படும். இந்தக் கண்காட்சியில் இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பது வரவேற்கத்தக்க விடயமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

# திருட்டுச்சம்பவத்தில் ஈடுபட்டவர் பொலிஸாரால் கைதானார்!

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதியில் கையடக்க தொலைபேசி உட்பட நான்கு இலட்சம்பெறுமதியான பணம் திருடப்பட்டது தொடர்பாக சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சில தினங்களுக்கு முன்பு அரியாலைப் பகுதியில் கையடக்க தொலைபேசிகள் உட்பட நான்கு லட்சம் ரூபா பணமும் திருடப்பட்டது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட நபர்கள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக பொலிஸார் இருவரை கைது செய்துள்ளனர். இந்தச் சந்தேகநபர்கள் இருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட கையடக்க தொலைபேசி கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களின் பாவனையில் இருந்தமையினாலேயே மேற்படி திருட்டுச் சம்பவம் கண்டறிய முடிந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரனைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# தே.ஐ.கூட்டணியில் சரத்பவாரை சேர்க்க சிவசேனா தலைவர் பால்தாக்கரே எதிர்ப்பு!

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரசை சேர்த்துக் கொள்ள, தனக்கு வெறுப்பு எதுவும் இல்லை என்று அண்மையில் கூறிய சிவசேனா தலைவர் பால்தாக்கரே நேற்றுமுன்தினம் தனதுமுடிவை திடீர் என்று மாற்றிக்கொண்டு சரத்பவாரை தே.ஐ.கூட்டணியில் சேர்க்க கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

எந்தக் கட்சியும் தீண்டத்தகாத கட்சியல்ல என்றும், எந்தக் கூட்டணியிலும் சேருவோம் என்றும் தேசியவாதக் காங்கிரஸ் தலைவர் சரத்பவார் அண்மையில் கூறியிருந்தார். இடதுசாரி கூட்டணி, காங்கிரஸ் கூட்டணி, பாரதி ஜனதா கூட்டணி என்ற இந்த 3 கூட்டணிகளிலும் சேர வாய்ப்பு உள்ளது என்றும் அவர் கூறியிருந்தார்.

இதனையடுத்து தேசியவாதக் காங்கிரஸ் கட்சியை பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு இழுக்க முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. இது தொடர்பாக எல்.கே.அத்வானி உட்பட சில முக்கிய தலைவர்களுடன் தேசியவாத காங்கிரஸ் தலைவர்கள் பேச்சு நடத்தினார்கள்.

இந்த பேச்சுவார்த்தைகள் நடந்தபோது, சிவசேனா கட்சித் தலைவர் பால்தாக்கரேயிடம் நிருபாகள் கருத்து கேட்டதற்கு தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தேசியவாதக் காங்கிரசை சேர்த்துக்கொள்வதில் தனக்கு எந்த வெறுப்பும் இல்லை என்று கூறியிருந்தார். ஆனால், தேசியவாத காங்கிரசில் உள்ள மகாராஷ்டிரா துணை முதல்வர் சவுகான் புஷ்பாலைத்தான் தன்னால் ஏற்கமுடியவில்லை என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், சிவசேனா கட்சியின் உயர்மட்டக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் மும்பையில் நடைபெற்றது. தேர்தல் கூட்டணி தொடர்பான சாதக, பாதகங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தேசியவாதக் காங்கிரஸை சேர்க்க சிவசேனா தொண்டர்கள் கடும் எதிர்ப்பு தெரிவிப்பதாக கூட்டத்தில் பேசப்பட்டது.

இதையடுத்து நேற்றுமுன்தினம் பால்தாக்கரே ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

பாரதிய ஜனதாவுடன் சிவசேனாக் கட்சி கடந்த 15 ஆண்டுகாலமாக உறவு வைத்துக் கொண்டுள்ளது. இப்போது, இந்த கூட்டணியில் தேசியவாத காங்கிரசையும் சேர்த்துக்கொள்வது உசிதமாக இருக்காது என்று அந்த அறிக்கையில் தாக்கரே கூறியுள்ளார்.

தேசியவாத காங்கிரசை தே.ஐ. கூட்டணியில் சேர்த்துக்கொண்டால், சிவசேனாவின் செல்வாக்கும், மதிப்பும் பறிபோய்விடும் என்றும் அந்த அறிக்கையில் தாக்கரே கூறியுள்ளார். மராட்டிய மாமனிதன் என்று அழைக்கப்படும் சரத்பவாரை கொள்கைப் பிடிப்பு இல்லாதவர் என்றும், தாக்கரே குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டு நலன் என்று கூறிக் கொண்டு சரத்பவார் சுயநலனுக்காக பாடுபடுகிறார் என்றும் தாக்கரே கடுமையாக சாடினார்.

தாக்கரேயின் இந்த அதிரடி முடிவால் தே.ஐ.கூட்டணியில் தேசியவாத காங்கிரசை சேர்க்க பாரதிய ஜனதா யோசித்து வருகிறது.

# கூட்டுறவை விரிவாக்குவதற்கு கூட்டுறவு மாதம் பிரகடனம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையினால், கூட்டுறவை மக்கள் மயமாக்கி அதன் அங்கத்தவர்களை இந்த ஆண்டு இரு மடங்காக அதிகரிக்கும் நோக்கில் 2004 ஆண்டு ஜனவரி மாதத்தினை கூட்டுறவு மாதமாகப் பிரகடனம் செய்துள்ளனர்.

கூட்டுறவுச்சபையின் செயற்பாடுகளை விரிவாக்கி சமய, சமூக, அரசியல் கட்டுமானங்களுக்கு அப்பால் கூட்டுறவுச் சமூகத்தை உருவாக்கும் நோக்கில் ஜனவரி மாதத்தினை கூட்டுறவு மாதமாகச் செயற்படுத்தி வருகின்றனர்.

இந்தக் கூட்டுறவு மாதத்தில் கூட்டுறவு விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், வில்லுப்பாட்டு, கருத்தரங்கு, நாடகம் நடாத்தி அதனூடாக மக்களிடம் சென்று ஒவ்வொரு சங்கங்கள் மூலமாகவும் அங்கத்தவர்கள் சேர்க்கப்படவுள்ளனர்.

கூட்டுறவு தன்மையை கிராமிய ரீதியில் முழுமையாக அமுலாக்கும் நோக்கிலேயே இவ்வாறான செயற்பாடுகளை வருட ஆரம்பத்தில் முன்னெடுத்துள்ளதாக யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபைத் தலைவர் பெ.கனசபாபதி தெரிவித்தார். (91)

## நுளம்பு வலைகளுக்கு மருந்தூட்டல்

பொது மக்களினால் பாவிக்கப்படும் நுளம்பு வலைகளுக்கு மருந்தூட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கை கொக்குவில் பொது சுகாதார பரிசோதகரால் இன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த நிகழவு இன்று நல்லூர் பிரதேசசபை கொக்குவில் மத்திய மருந்தகத்தில் நடைபெறவுள்ளது எனவே நுளம்பு வலைகளைப் பயன்படுத்தும் பொது மக்கள் அனைவரும் தங்களது நுளம்பு வலைகளுக்குமருந்தூட்டலை மேற்கொண்டு பயன் பெறுமாறு நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சிவ சக்தி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை பி.ப 4.00 மணிக்குக்கு திருநெல்வேலி (தெற்கு) சிவன் கோவில் தெற்கு வீதியில் அமைந்துள்ள அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதென நிலையத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்

## கரடி கடித்ததில் குடும்பப் பெண் படுகாயம்

(கிளிநொச்சி)

கரடி கடித்து குடும்பப் பெண் ஒருவர் காயடைந்துள்ளார். மணவாளன் பட்டுமுறிப்பு மாங்குளம் பகுதியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், ஆதே இடத்தைச் சேர்ந்த மாணிக்கம் மீரா (வயது-56) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

தேங்காய் பறிக்கச் சென்றபோது இவர் கரடிக் கடிக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகிறது. உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் ஐந்து நாட்களின்பின் யாழ்ப்பாணம் போதன வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (121)


## கண்ணீர் அஞ்சலி

08.01.2004 வியாழக்கிழமை வவுனியாவில் காலமான

**திருமதி. ஈஸ்வரி சபாரத்தினம்**

(முன்னாள் தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்க பணியாளர்)

அவர்கள் மறைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகிறோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்.

09.01.2004 (சி-2091)

## HOME ECONOMIC CENTRE

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி.

கேக்ஐசிங், தலையலங்காரம், மணப்பெண்அலங்காரம், தையல்கலை, சமையற்கலை, துணியில் வர்ணம்தீட்டுதல், (Fabric Painting) பூவேலை, கைவேலை (Handcraft)

குறைந்தகட்டணம், நிறைந்தசேவை

விபரங்களுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்.

முக்கிய குறிப்பு :~

பழைய மாணவிகள் பரீட்சை சான்றிதழ் வழங்கள் பற்றிய கலந்துரையாடலில் 10.01.2004 சனிக்கிழமை (இன்று) காலை 9 மணிக்கு கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

41,இராஜவீதி
நல்லூர்,யாழ்ப்பாணம்.
(சட்டநாதர் கோவிலுக்குமுன்பாக)

நிர்வாகி
ரூபா சத்தியமூர்த்தி

(சி-2090)

## ராஜா யாழ்ப்பாணம்.

ராஜ்கிரன், ஸ்ரீ, கருணாஸ் நடித்த

**கொஞ்சிப் பேசலாம்**

காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்)

(சி-2005)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், ஜோதிகா நடித்த

**குஷி**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

KEOMA

(சி-2004)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புத்தம் புதிய LG WASHING MACHINE 5 Kg கொழும்பு விலையில் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0776116885
0776023930 (583)

### THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆண்டு 1 இல் இருந்து 11 வரை எல்லாப் பாடங்களும் GRAMMAR, SPOKEN ENGLISH மேற்படிப்பு வரை.

பதிவுக்கு : அதிபர்,
426 (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம் (364)

## அலுவலக இடம் வாடகைக்கு

மக்கள் வங்கி யாழ். பிரதான வீதிக்கிளையின் மேல்மாடி (பரப்பளவு 5900 ச.அ) அரச அலுவலகங்கள்/ கூட்டுத்தாபனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

ஆர்வமுடையோர் யாழ்.பிரதான வீதிக் கிளை முகாமையாளருடன் நேரில் 14.02.2004 ற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

விசேட நிறைவேற்றதிகாரி -வடவலயம்.
உ. பொ. மு (வ.வ) க்காக
(சி.இளம்பிறைநாதன்)

மக்கள்வங்கி,
இல. 79, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

# அத்துருகிரிய சம்பவத்தை விசாரிக்க நாடாளுமன்ற விசேட உபகுழு அமைப்பு

## சபை அங்கீகாரம் வழங்கியது

(கொழும்பு)

அத்துருகிரிய - மிலேனியம் சிற்றியில் இராணுவத்தின் விசேட படைப்பிரிவுக்குச் சொந்தமான ஆயுத மறைவிடத்தில் நடத்தப்பட்ட தேடுதல் சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்கு, நாடாளுமன்ற விசேட உப குழுவொன்றை அமைப்பதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

இந்த நாடாளுமன்ற விசேட குழுவை அமைப்பதற்கான அங்கீகாரத்தை கோரும் பிரேரணை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்பட்டது.

இந்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, ஆதரவாக 101 வாக்குகளும், எதிராக 44 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இந்தப் பிரேரணைக்கு ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த உறுபபினர்களும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் இந்தப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தனர்.

# பொலிஸ் சேவைகள் வழமைபோலாம்!

வடக்கு - கிழக்கில் பொலிஸ் சேவைகள் இடையூறின்றி நடைபெறுவதாக, இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட் தெரிவித்தார். நேற்று முன்தினம், பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் பொலிஸ்மா அதிபருடன் 10 நிமிட சந்திப்பு இடம்பெறறபோதே, பொலிஸ்மா அதிப ருக்கு இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் பொலிஸ் சேவை எவ்வித இடையூறுமின்றி சிறப்பாக நடைபெறுகின்றது. இதை விட, சிறப்பாக பொலிஸ் சேவை மக்களை சென்றடைய வேண்டும் மென்றால், அதற்கான உதவிகளை இலங்கைப் பொலிஸாருக்கு வழங்க அமெரிக்க முன்வருமென, அவர் தெரிவித்தார். இவற்றைவிட வடக்குக் கிழக்கில் சேவையாற்றும் அதிரடிப்படையினரின் பணிகள் சிறப்பாக இருப்பதாகவும் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

# சமாதான நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## ஜனாதிபதியின் பேச்சாளர் கூறுகின்றார்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகள் ஒருதலைப்பட்சமானதல்ல இதற்கு சகல தரப்புக்களிலும் ஒத்துழைப்பு தேவை என்று ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி பொறுப்பேற்ற மூன்று அமைச்சுக்களையும் மீண்டும் கையளிக்காவிட்டால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை திருத்தி அமைக்கவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியது தொடர்பாகவே ஹரீம் பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்று இரண்டு மாதங்களாகியும், போர்நிறுத்த உடன்படிக்கை எவ்வித பிரச்சினைகளுமின்றி நடை முறைப் படுத்தப்படுகின்றது.

விடுதலைப் புலிகளுடன் யுத்தம் எதுவும் ஏற்படவில்லை. இதனால் ஜனாதிபதி பொறுப்பேற்ற மூன்று அமைச்சுக்களை மாற்றியமைக்க வேண்டியதில்லை, இந்த அமைச்சுக்கள் தொடர்பாக சிக்கல்கள் எதுவும் இருப்பதாகவே தெரியவில்லை எனவே அரசியல் சாசனத்திற்கு அமைய ஜனாதிபதியிடம் பாதுகாப்பு அமைச்சு இருக்கவேண்டுமென அவர் தெரிவித்தார்.

# அமைச்சர் மகேஸ்வரன்மீது நடவடிக்கை எடுக்கவும்!

## தேசிய எதிர்ப்பு முன்னணி பிரதமருக்கு கோரிக்கை

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கும்படி, அமெரிக்கத்தூதுவரிடம் கோரிக்கை விடுத்த இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மீது நடவடிக்கை எடுக்குமாறு, தேசிய எதிர்ப்பு முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

அமைச்சர் மகேஸ்வரன் அமெரிக்கத் தூதுவரிடம் முன்வைத்த கோரிக்கை, ஐக்கிய தேசியக்கட்சியின் முடிவு அல்ல என்று, கட்சியின் பேச்சாளர் கஜந்த கருணாதிலக தெரிவித்தார்.

இதையடுத்தே, அமைச்சர் மகேஸ்வரன்மீது, கட்சி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று, தேசிய எதிர்ப்பு முன்னணி அறிவித்துள்ளது.

அத்துடன், மலையக மக்கள் முன்னணித் தலைவரும், அமைச்சருமான பெ.சந்திரசேகரனும் விடுதலைப் புலிகளை பகிரங்கமாக ஆதரித்து வருவதால் - அவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று, தேசிய எதிர்ப்பு முன்னணி கோரியுள்ளது.

தேசிய எதிர்ப்பு முன்னணியின் அமைப்பாளர்களான, வண.எல்லே குணவன்ச தேரோ, டொக்டர் குணதாஸ அமரசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்கள் விமல் வீரவன்ச, அர்ஜுன ரணதுங்க ஆகியோர் கைச்சாத்திட்டு இநதக் கோரிக்கையை விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

# பேச்சுவார்த்தை மேசைக்கு புலிகள் திரும்பாமல் தேசியஅரசு பற்றிப்பேசுவதில் பயன் இல்லை!



## பிரதமர் ரணில் தெரிவிப்பு

புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்பாமல், தேசிய அரசாங்கம் பற்றிப் பேசுவதில் பயனில்லை என -

படுவஸ்நுவர பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தின்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துவர வேண்டியதே, இப்போது தம்முன்னுள்ள பிரதானமான பணி எனக் குறிப்பிட்ட பிரதமர், அதனைச் செய்யாது தேசிய அரசாங்கம் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை என்று தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வரச்செய்து, சமாதான முயற்சிகளை மீண்டும் சீராக முன்னெடுக்கத் தொடங்கிய பின்னரே, தேசிய அரசாங்கம் குறித்துப் பேசமுடியும் என்று, அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதே கூட்டத்திலேயே சமாதான முயற்சிகளை முழுமையாக ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும் எனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தேர்தலை எதிர்கொள்ள

# 10 அமைச்சர் கொண்ட குழுவை ஐக்கிய தேசிய கட்சி அமைத்தது!

நாட்டில் தேர்தல் ஒன்று வருமாக இருந்தால், அதனை எதிர் கொள்ளும் நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சி இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி - தேர்தலுக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளும் முகமாக அமைச்சர்கள் குழுவொன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைத்துள்ளார்.

அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், மஹிந்த சமரசிங்க, ராஜித சேனாரத்ன, மஹிந்த விஜயசேகர, எஸ். பி.திஸநாயக்க, காமினி லொக்குகே, கருணாசேன கொடித்துவக்கு, டபிள்யு.ஜே.எம். லொக்குபண்டார உட்பட பத்து அமைச்சர்கள் இந்தக் குழுவில் அடங்கியுள்ளனர்.

இந்தக் குழுவின் முதற்கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், இக்குழுவின் அடுத்தக்கட்ட நகர்வுகள் தொடர்பாக விரைவில் பேசுவதென முடிவு எடுக்கப்பட்டது. (01)

# தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒன்றியம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சி

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் மீண்டும், தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சிகள் தற்போது மீண்டும் தீவிரமாக முன்னெடுக்கப் பட்டுவருவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

தற்போது காணப்படும் நடைமுறை, அரசியல் நகர்வுகளுக்கு ஏற்பவே இந்த முயற்சிகள் மீண்டும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக, அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு, மலையகம் என அனைத்துத் தமிழ்ப் பிரதேசங்களையும் உள்ளடக்கிப் பொதுவாக தேர்தலுக்கு முகம்கொடுப்பது என்ற அடிப்படையில் தெளிவான கொள்கை எதுவும், வகுக்கப்படவில்லை எனவும், நாடாளுமன்றத்துக்குள் ஒரு பொது முன்னணியாகச் செயற்படுவது குறித்தே, தற்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

# வான்படை அதிகாரிகளின் பதவி நிலையில் மாற்றம்!

(கொழும்பு)

இலங்கை விமானப்படையின் பதவிநிலைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எல்.டி.சி.ஹேரத் அறிவித்துள்ளார்.

2004 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. எயர் கொமடோர் சன்ன அசேல குணரத்ன மற்றும் எயர் கொமடோர் லாலக்க ஹரீந்திரநாத், பீரிஸ் ஆகிய இரண்டு உயரதிகாரிகளும் - எயர் வைஸ் மார்ஷலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். அதேவேளை, உடுவெலவில் கொமாண்டர் உடுவெல முதியான் சலாகே உபாலி தயானந்த, வான்படையின் தொண்டர் சேவையிலிருந்து நிரந்தர சேவைக்கு மாற்றப்பட்டதாகவும் - மேலும், விங்கொமாண்டர் வீரசிறி விக்கிரமசிங்க ஆராச்சிகே உசான் தீபிக விக்கிரம சிங்க கடந்த முதலாம் திகதியிலிருந்து ஓய்வு பெற்றிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ஹேரத் அறிவித்துள்ளார்.



நயினாதீவு நாக விகாரையில் பிரதிஷ்டை செய்வதற்காக 4 அடி உயர புத்தர் சிலை கடற்படைப் படகு மூலம் எடுத்துச் செல்லப்படுகிறது.

# மாகாணசபை தேர்தலை ஒரேநாளில் நடத்த சட்ட திருத்தம் செய்ய அரசாங்கம் தீர்மானம்!

(கொழும்பு)

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை, ஒரே நாளில் நடத்தும் விதத்தில் மாகாண சபைச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியின் கொள்கை வகுப்புக் குழுவின் கூட்டம், கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போதே, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

தற்போதைய அரசியல் குழப்ப நிலைக்குத் தீர்வொன்றைக் காண முடியாதிருப்பதால், மாகாணசபைத் தேர்தலுக்கு கட்சி தயாராக வேண்டுமென, இக்கூட்டத்தில் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அனைத்து மாகாணசபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடாத்துவதற்கு மாகாண சபைகள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இந்தத் தேர்தல் ஒரே தினத்தில் நடாத்தப்பட வேண்டும் என, நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக் குழு சிபார்சு செய்திருந்தது.

மாகாண சபைத் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கு முதலில் எதிர்ப்புத் தெரிவித்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு, தற்போது இந்தத் தேர்தல்களை ஒரே நாளில் நடாத்த வேண்டுமெனக் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 76 இலங்கையர் எகிப்தில் கைது!

(எதென்ஸ்)

இத்தாலிக்குச் சட்டவிரோதமாக பயணத்தை மேற்கொண்டிருந்த, 76 இலங்கையர்களைக் கைது செய்துள்ளதாக, எகிப்தியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்றவர்களையே, தாம் கைது செய்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர்களை இன்னமும் இரண்டொரு தினங்களில் இலங்கைக்கு திருப்பி அனுப்பவிருப்பதாக, எகிப்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் சட்டவிரோதமாக ஆட்களை அனுப்புவோர் எகிப்திய ஒரு வழியாக பயணிப்பதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் குறிப்பிட்டன.

### சுமதிபாலவின் உடல்நிலை;

# அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவு

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத்தலைவர் திலங்க சுமதிபாலவின் உடல் நிலை குறித்து, நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு கொழும்பு பிரதான மஜிஸ்ரேட், கொழும்பு நகர சட்ட வைத்திய அதிகாரியைப் பணித்துள்ளது.

நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய சுமதிபால தாம் நோய்வாய்ப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார். அதனை அடுத்து, சி.ஐ.டியினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து உண்மையிலேயே நோய்வாய்ப்பட்டுள்ளாரா என்பது பற்றிக் கண்டறியுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர் விசாரணைகளில் இருந்து தப்புவதற்காக தமது மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளதாக, அரசாங்கச் சட்டத்தரணி வாதிட்டார். ஏனைய பிரஜைகள் போன்று சுமதிபாலவையும் நடத்தி கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்தை அரசாங்க சட்டத்தரணி கேட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணிக்கு எதிராக பக்னர் செயற்படுகின்றார்!

## சர்வதேச கிரிக்கெட் சபையிடம் கங்கூலி புகார்



தலைசிறந்த கிரிக்கெட் நடுவர்களில் ஒருவரான மேற்கிந்தியத்தீவுகளைச் சேர்ந்த ஸ்ரீவ்பக்னர் இந்திய அணிக்கு எதிராகச் செயற்படுவதாக - இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்கூலி குற்றம் சாட்டியுள்ளார்.

மெல்போர்னில் இந்திய அணித்தலைவர் கங்குலி இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

கிரிக்கெட்டில் சிறந்த நடுவர் என்று சர்வதேசக் கிரிக்கெட் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவர் ஸ்ரீவ் பக்னர். இவர் அண்மையில் நடந்து முடிந்த இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான நான்கு டெஸ்ட் போட்டிகளிலும் நடுவராகப் பங்குபற்றினார்.

இவர் இந்தப் போட்டிகளில் இந்தியாவுக்கு எதிராகச் செயற்பட்டு வந்தார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான பிரிஸ்பேர்னில் நடந்த டெஸ்ட் போட்டியில் சச்சின் டெண்டுல்கரை சர்ச்சைக்குரிய முறையில் ஆட்டமிழந்ததாக அறிவித்தார்.

அத்துடன், சிட்னியில் நடந்த டெஸ்ட் போட்டியிலும் இவரது செயறபாடுகள் திருப்திகரமாக இருக்கவில்லை. சிட்னியில் நடந்த டெஸ்ட போட்டியில் அவுஸ்திரேலிய அணிவீரர்களான லாங்கர், மாட்டின் ஆகியோரை எல்.பி.டபிள்யூ என பார்த்திவ் பட்டேல் கேட்டபோது - அதற்கு ஸ்ரீவ்பக்னர் அவரை கைவிரலை நீட்டி எச்சரித்தார்.

ஸ்ரீவ் பக்னரின் மோசமான தீர்ப்புக்களால்தான் சிட்னியில் நடந்த நான்காவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

இது குறித்து சர்வதேச கிரிக்கெட் சபைக்கு இந்திய அணித்தலைவர் கங்கூலி புகார் செய்துள்ளார். இதுவரை 86 டெஸ்ட் போட்டிகளில் நடுவராக பணியாற்றிய அனுபவமுள்ள ஸ்ரீவ்பக்னர் தற்போது அவுஸ்திரேலியாவில் நடைபெறும் வி.பி தொடரில் இந்தியஅணி விளையாடும் எட்டுப் போட்டிகளில் - ஐந்தில் ஸ்ரீவ்பக்னர் நடுவராகக் கடமையாற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மூன்றாவது ஒருநாள் போட்டியில்

# நியூசிலாந்து-பாகிஸ்தான் அணிகள் இன்று கிறிஸ்ட்சேர்ச்சில் மோதும்!

பாகிஸ்தான் - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டித் தொடரில் மூன்றாவது போட்டி இன்று நியூசிலாந்தில் கிறிஸ்ட்சேச் நகரில் இடம் பெறவுள்ளது.

நியூசிலாந்தில் பயணத்தை மேற்கொண்டிருக்கும் பாகிஸ்தான் அணி டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய பின்னர் ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடிவருகிறது.

ஒக்லாந்தில் நடந்த முதலாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 4 விக்கெட் வித்தியாசத்திலும் குயின்ஸ்ரவுனில் நடந்த இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் அணி ஆறு விக்கெட் வித்தியாசத்திலும் வெற்றிபெற்றிருந்தன.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரின் மூன்றாவது ஆட்டம் கிறிஸ்ற்சேர்ச் நகரில் இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் இரு நாட்டு அணிகளின் வீரர்களும் கிறிஸ்சேர்ச் நகரில் நேற்றுத் தீவிர பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்.

# முத்தரப்பு ஒரு நாள் போட்டித் தொடரில் அவுஸ்ரேலியாவிடம் தோற்றது இந்தியா

இந்தியா, அவுஸ்ரேலியா, சிம்பாப்வே ஆகிய நாடுகள் மோதும் முத்தரப்பு கிரிக்கெட் போட்டியின், நேற்றைய முதல் ஆட்டத்தில் இந்திய அணியை 18 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. அவுஸ்ரேலிய அணித்தலைவர் ரிக்கிபொண்டிங் தனது அணி முதலில துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

தொடக்க ஆட்டக்காரர்களான கில்கிறிஸ்ட்டும், ஹேய்டனும் களமிறங்கினார்கள். இருவரும் இந்திய வீரர்களின் பந்துவீச்சை அடித்து ஆடினார்கள். கில்கிறிஸ்ட் 34 ரன்கள் எடுத்திருந்தபோது அகர்கர் வீசிய பந்தில் பதானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவர் 34 பந்துகளில் 6 பவுணடரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். அப்போது அணியின் ஸ்கோர் 9 ஓவரில் 59 ஓட்டங்களாக இருந்தது. அடுத்து இரண்டாவது விக்கெட்டுக்கு ஹேய்டனும், பொண்டிங்கும் ஜோடி சேர்ந்தனர்.

சிறிது நேரத்தில் அதிரடி ஆட்டக்காரர் ஹேய்டன் அகர்கர் வீசிய பநதில் யுவராஜ்சிங்கிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அவர் 22 பந்துகளில் 2 பவுண்டரியுடன், 20 ஓட்டங்களைச் சேர்த்தார். இதனையடுத்து பொண்டிங்குடன் மாட்டின் மூன்றாவது விக்கெட்டுக்கு ஜோடியாக இணைந்தார். அவர் அகர்கர் பந்தில் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து சைமன் நான்காவது விக்கெட்டுக்காக பொண்டிங்குடன் இணைந்து களமிறங்கினார். அவுஸ்ரேலியா அணியின் ஸ்கோர் 89 ஆக இருந்தபோது, பாலாஜியின் பந்து வீச்சில் அவரிடமே பிடி கொடுத்து பொண்டிங் ஆட்டமிழந்தார். அவர் 19 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 18 ஓட்டங்களை எடுத்திருந்தார். 89 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுக்களை அவுஸ்திரேலிய அணி இழந்தது. எனினும் சைமன்சும், கிளார்க்கும் நிதானமாகவும், அதேநேரத்தில் அதிரடியாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இருவரும் இந்திய வீரர்களின் பந்து வீச்சில் அடித்து விளாசினர். கிளார்க 63 ஓட்டங்களை எடுத்திருந்த போது கும்ளே பந்தில் ஆட்டம் இழந்தார். அவர் 66 பந்துகளில் 6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் இந்த ஓட்டங்களைப் பெற்றார்.

சைமன்ஸ், கிளார்க் ஜோடி 5 வது விக்கெட்டுக்காக 143 ஓட்டங்களை சேர்த்தது. அடுத்து சைமன்சுடன் பெவன் ஜோடி சேர்ந்தார். பெவன் வந்த சிறிது நேரத்தில் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டை ஷேவாக் கைப்பற்றினார். அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த சைமன்ஸ் 88 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஆட்டமிழந்தார். அவர் 102 பந்துகளில் 5 பவுண்டறி, 3 சிக்ஸருடன் இந்த ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அடுத்து வந்த ஹார்வி 28, பிக்கல் ஒரு ஓட்டத்துடனும், வில்லியம்ஸ ஓட்டமெதுவும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். கிலெஸ்பி 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

அவுஸ்திரேலிய அணி 48.3 ஓவரகளில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 288 ஓட்டங்கள் குவித்தது. இதனால் இந்திய அணிக்கு 289 ஓட்டங்கள் இலக்காக அவுஸ்ரேலிய நிர்ணயித்தது.

அகர்கர் சிறப்பாகப் பந்து வீசி 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். அவர் 9.3 ஓவர்கள் பந்துவீசி 42 ஓட்டங்களைக் கொடுத்து இந்த விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.




பாலாஜி, ஷேவாக், கும்ளே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை எடுத்தனர்.

289 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா களம் இறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களான டெண்டுல்கரும், ஷேவாக்கும் ஆடினார்கள். இருவரும் நிதானமாகவும், அதேநேரம் ஓட்டவிகிதம் குறையாமலும் விளையாடினர். 35 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சேவாக் ஹார்வி பந்தில் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து கங்குலி களமிறங்கினார். டெண்டுல்கர் சிறப்பாக விளையாடி அரைச்சதத்தை எட்டினார். டெண்டுல்கர் 63 ஓட்டங்களுடன் சைமண்ட்ஸ் பந்தில் பொண்டிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து லக்ஸ்மன் ஆடவந்தார். அவர் 16 ஓட்டங்களுடன் சைமன்ஸ் பந்தில் ஆட்டமிழந்தார்.ராவிட் களமிறங்கினார். 16 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கிளார்க் பந்தில் ஆட்டமிழந்தார்.

யுவராஜ்சிங் 25 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹார்வி பந்தில் ஆட்டமிழந்தார். இதைத் தொடர்ந்து கங்கூலி ரண் அவுட்டானார். இவர் 83 பந்துகளில் 8 பவுண்டரகள், ஒரு சிகஸர் உட்பட 82 ஓட்டங்களைப் பெற்றார். தொடர்ந்து வந்த அகர்கர் ஒரு ஓட்டத்துடனும், பங்கர் 3 ஓட்டங்களுடன், பதான் 3 ஓட்டங்களுடன், கும்ளே 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். 49 ஓவர்களில் இந்தியா 270 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

அவுஸ்ரேலிய அணியின் ஹார்வி 3விக்கெட்டுக்களையும், சைமன்ஸ், வில்லியம்ஸ் ஆகியோர் இரண்டு விக்கெட்டுக்களையும், ஜிலெஸ்பி, கிளார்க் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் பெற்றது குறிப்பிடத்தக்கது. இந்தப் போட்டியின் மூலம் அவுஸ்ரேலிய அணி 5 புள்ளிகளையும், இந்தியா ஒரு புள்ளியையும் பெற்றது. அவுஸ்ரேலியா 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தப் போட்டியில் வெற்றிபெற்றது.



525 நாட்கள் சிறைவாசம் அனுபவித்து வந்த நெடுமாறன் விடுதலையான பின்னர் அவருக்கு வரவேற்பு அளிக்கப்படுகிறது.

# தி.மு.கவுடனான கூட்டணி உறுதி தேர்தலின் பின்னரே பிரதமர் தெரிவு

### மன்மோகன் சிங் தெரிவிப்பு

தி.மு.கவுடன் கூட்டணி உறுதி என்றும், தேர்தலுக்கு பின்னர்தான் பிரதமர் தேர்வு என்றும் சோனியாவின் தூதர் மன்மோகன் சிங், கருணாநிதியை சந்தித்த பின் கூறினார்.

காங்கிரஸ் கட்சியின் மேலிட பிரதிநிதியாக மன்மோகன் சிங் நேற்று முன்தினம் சென்னையில் கருணாநிதியை சந்தித்த செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தொகுதி பங்கீடு பற்றி பிறகு பேசப்படும். மதசார்பற்ற கட்சிகளாக உள்ள அனைத்துக் கட்சிகளுடன் இணைந்து போராடுவோம்.

இந்தக் கூட்டணிக்கு யார் பிரதமர் என்பதையெல்லாம் தேர்தலுக்குப் பிறகே முடிவுசெய்வோம்.

தமிழ் நாட்டில் அமையும் கூட்டணியில் ஏற்படும் பிரச்சினைகளை கருணாநிதி தீர்த்துவிடுவார்.

பா.ம.க. கூட்டணிக்கு வருவது குறித்து கருணாநிதி பார்த்துக்கொள்வார். இவ்வாறு அவர் கூறினார்.

கருணாநிதி நிருபர்களிடம் கூறும போது, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுடன் முற்போக்கு கூட்டணி அமைகிறது. இதில் ம.தி.மு.கவும் இடம் பெறு கிறது. பா.ம.க 12ஆம் திகதி சந்திப்பதாக கூறியுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

இதேவேளை மன்மோகன் சிங்-கருணாநிதி இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தொகுதி பங்கீடு குறித்து முடிவு செய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது. தி.மு.கவுக்கு 15 தொகுதிகளும், காங்கிரசுக்கு 10 தொகுதிகளும், பா.ம.கவுக்கு 6 தொகுதிகளும், ம.தி.மு.கவுக்கு 4 தொகுதிகளும், வ.கம்யூனிஸ்ட், இ.கம்யூனிஸட் கட்சிகளுக்கு தலா 2 தொகுதிகளும், ரா.ஜ.பேரவைக்கு ஒரு தொகுதியும், எம்.ஜி.ஆர். கழகம் ஜெகத் ரட்சகனுக்கு ஒரு தொகுதியும் என முடிவு செய்யப்பட்டுள்ளது. பா.ம.க கூட்டணிக்கு வராவிட்டால் அந்த 6 சீட்டை தி.மு.கவும் காங்கிசும் பிரித்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.



சென்னையில் மன்மோகன்சிங் - கருணாநிதி சந்தித்தபோது-

# திடீரென வந்த புத்தி

முன்னொரு காலத்தில் தருமன் என்ற அரசன் தனது நாட்டை, நல்லமுறையில் ஆண்டு வந்தான் ஒரு சமயம் - அவனுடைய நாட்டைவிட்டுத் தப்பியோட முயன்ற அடிமை ஒருவனை - வீரர்கள் கைது செய்து அரசன்முன் கொண்டுவந்தனர்.

தன்னருகேயிருந்த அமைச்சனைப் பார்த்து - "தப்பியோட முயன்ற



இந்த அடிமைக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?" என்று கேட்டான் அரசன். ஏற்கனவே அந்த அடிமையின்மீது பகை கொண்டிருந்த அமைச்சன் - "அரசே! இந்த அடிமைக்குத் தூக்குத்தண்டனை விதியுங்கள். தப்பிச்செல்ல எண்ணும் மற்ற அடிமைகளுக்கும் இது பாடமாக அமையட்டும்" என்று சொன்னான்.

இதைக் கேட்டு அரசன் திடுக்கிட்டான். ஆனால், அறிவுள்ள அந்த அடிமை - "அரசே நான் பெரியதாக எந்தக் குற்றமும் செய்யவில்லை, என்னை நீங்கள் கொன்றுவிட்டால், ஆண்டவனின் முன்னால் ஒரு கொலையாளியாக நிற்கவேண்டிவரும். என்னைக்



கொன்ற பிறகும், தங்கள்மீது பழிவராமலிருக்க நல்லவழியொன்று சொல்கின்றேன்". என்றான் "என்ன வழி" என்று கேட்டான் அரசன்.

உங்கள் மீது பழி ஏற்படுவதற்குக் காரணமாகவிருந்த இந்த அமைச்சரைக் கொல்வதற்கு எனக்கு அனுமதிகொடுங்கள், பின்னர் அமைச்சரைக் கொன்ற குற்றத்திற்காக எனக்குக் கொலைத் தண்டனை விதியுங்கள். அப்படிச் செய்தால் உங்கள்மீது பழி சேராது" என்றான். அடிமை.

இதனைக் கேட்ட அமைச்சன் நடுங்கிவிட்டான்.

அமைச்சனைப் பார்த்த அரசன்.

"சிறு தண்டனை பெறவேண்டிய இந்த அடிமையை அநியாயமாகக் கொல்லச் சொன்னீர்களே!

இப்போது நான் என்ன செய்வது," என்று கேட்டான்.

அந்த அடிமை மிகத் தந்திரமாகத் தன்னையும் சேர்த்துச் சூழ்ச்சி வலை பின்னியிருப்பதை அறிந்த அமைச்சன் -

"அரசே! இறைவனுக்காக இவன் குற்றத்தை மன்னியுங்கள். அப்பொழுதுதான் என் குற்றமும் மன்னிக்கப்படும்". என்றான்.

அடிமையும் அப்பொழுதே விடுதலை செய்யப்பட்டான்.

## கல்வி



கல்வி என்னும் ஒளிவிளக்கே!
எனக்கு அறிவு தந்த சுடரே!
என்வாழ்வில் இன்று இருள் இல்லை!
உனது பிறப்பிடம் தான் எங்கே?
உலகிற்கு இறைவன் தந்த அருள் செல்வமே
கொடுக்கக் கொடுக்கக் குறையாது!
பெருகிச் செல்லும் அருங்கல்வியே!
உனக்கு முற்றுப்புள்ளியே இல்லை!

ஜெ.ஜெயசீதா
தரம் - 10.
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

## மாதங்களின் பெயர் வந்த கதை

♥ ஜனவரி - சொர்க்கத்தின் வாயில் காப்போன் (JANUS) என்பவரின் பெயரால் அழைக்கப்படுகிறது.

♥ பெப்ரவரி - பாவங்களுக்குப் பரிகாரம் தேடும் காலத்தை பெப்ருவாலியா (Februalia) என்பவரின் பெயரால் வழங்கப்படுகிறது.

♥ மார்ச் - யுத்த தேவதையான (MARS) என்பவரின் பெயரால் அழைக்கப்படுகின்றது.

♥ ஏப்பிரல் - ஏப்பிரே (Aperire) என்ற லத்தீன் வார்த்தையின் அர்த்தம் - மலர்வு, அரும்புதல் இதன் பெயரால் அழைக்கப்படுகிறது.

♥ மே - தாவரங்களை வளரவைக்கும் தேவதையான மேய்யா (Maia) வின் பெயரால் அழைக்கப்படுகிறது.

♥ ஜூன் - ஜுவனிஸ் (Juvenis) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

♥ ஜூலை - ஜூலியஸ் ஜூவின் பெயரால் அழைக்கப்படுகின்றது.

♥ ஓகஸ்ட் - முதலாவது ரோமானிய சக்கரவர்த்தியின் அகஸ்தஸ்சின் (Augustus) பெயரால் அழைக்கப்படுகிறது.

♥ செப்ரெம்பர் - லத்தீன் வார்த்தை செப்ரெம் (septem). இதன் அர்த்தமே செப்ரெம்பர்.

♥ ஒக்ரோபர் - லத்தீன் வார்த்தை Auto. இதன் அர்த்தம் - 8.

♥ நவம்பர் - லத்தீன் வார்த்தையான (Novem) நவம். இதன் அர்த்தம் - 9.

♥ டிசம்பர் - லத்தீன் வார்த்தையான டிசம் (Decem). இதன் அர்த்தம் - 10.

ச. சகதிதர்சினி - தரம்- 5, தமிழ் கந்தையா வித்தியாசாலை.

## கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

காளமேகப் புலவர், பறவைகளுக்கு ஒன்பது கால்கள் உள்ளன. யானைகளுக்குப் பதினேழு கால்கள் உள்ளன என்று சொல்கிறார். இது சரியா? தவறா? கண்டுபிடியுங்கள்.

விடை அடுத்தவாரம்

சென்றவார விடை.

| | | |
|---|---|---|
| வேலைக்குச் சென்ற நாட்கள் | - | 22 |
| வேலைக்குச் செல்லாத நாட்கள் | - | 08 |
| 22x18 | = | 396 |
| 8x15 | = | 120 |
| 396 - 120 | = | 276 ரூபா. |

இங்கே மடிக்கவும்



# நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

## லிபியா

| | | |
|---|---|---|
| தலைநகர் | - | திரிபோலி |
| முக்கிய மொழி | - | அராபிக் |
| மதம் | - | இஸ்லாம் |
| நாணயம் | - | லிபியன் தினார் |
| மக்கள் தொலை | - | 5.5 மில்லியன் |
| நாட்டின் தலைவர் | - | கேணல் முகம்மட் கடாபி |
| ஆயுட்காலம் | - | ஆண் - 68.5. பெண் - 72.4. |



இந்த நாடு வடக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள ஒரு அரபு நாடு. நாட்டின் பெரும்பகுதியை சஹாரா பாலைவனம் சூழ்ந்துள்ளது. லிபியா ஆரம்பத்தில் ரோமன் நாட்டின் கொலனியாக இருந்தது. 1951 ஆம் ஆண்டு சுதந்திரம் அடையும்வரை, அரபு, துருக்கி இறுதியாக




இத்தாலி ஆகிய நாடுகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. 1959 ஆம் ஆண்டு, இந்த நாட்டில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது. 10 ஆண்டுகள் மன்னராட்சியின்கீழ் இருந்த இந்த நாடு, பின்னர் 27 வயது நிரம்பிய மொகமட் கடாபியினால், சதிப் புரட்சி ஒன்றின்மூலம், மன்னராட்சி நீக்கப்பட்டது. இதன்பின், புதிய அத்தியாயம் பிறந்தது. முதலாளித்துவம், கம்யூனிசம் இரண்டுக்கும் மாறுபட்ட ஆட்சி முறையை நாட்டில் கடாபி அறிமுகப்படுத்தினார். லிபியா - முகமதுவின் பிறப்பை மையமாகக்கொண்ட ஒரு நாட்காட்டியை பாவித்துவருகின்றது.

இந்த நாட்டின் முக்கிய உற்பத்திகள் -

விவசாயம் - தக்காளி, கோதுமை, பேரீச்சம்பழம், பார்லி, கால்நடைகள்.

உற்பத்தி - பெற்றோலியப் பொருட்கள், கனிமம், பெற்றோலியம்.

## சில தகவல்கள்

- கடலில் மூழ்கிக்கொண்டிருக்கும் தீவு எது?
  மாலைதீவு.
- தூங்கும்போது எந்தப் பிராணி கண்களை மூடாமல் தூங்குகிறது?
  மீன்.
- சிரிப்பூட்டும் வாயு எது?
  நைதரசனீரொட்சைட்
- நான்கு கண்களைக் கொண்ட மீன் எங்குள்ளது?
  மத்திய அமெரிக்காவில்.
- முட்டையில் இல்லாத விற்றமின் எது?
  விற்றமின் - C

இ.ரோஜினி தரம்- 7, இந்து மகளிர் கல்லூரி.



### சிந்தனைக்கு!

ஒற்றுமையே வாழ்வின் பலம்
அதில்தான் உலகின்
சுழற்சியே உள்ளது.

# சிறுவர் அரங்கம்

**அன்புச் சிறுவர்களே!**

உங்கள் கல்வியில் புதிய புதிய மாற்றங்கள் எல்லாம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்போது நீங்கள் புதியதொரு வகுப்பில் கல்வி பயில்கிறீர்கள். ஆரம்பத்தில் சங்கமாக இருக்கும். படிப்படியாகப் பழைய ஆர்வமும், சுறுசுறுப்பும் வந்துவிடும். புதிய கணிப்பீட்டு நுணுக்கங்களையும் உங்களால் அறியமுடியும். ஒரு வகுப்பு கூடும்போது, படிப்புச்சுமை அதிமாகிறதே என்று யோசிக்காதீர்கள். ஒவ்வொரு பாடத்தையும் ஆசிரியர் கற்பிக்கும்போது, அவதானமாகக்கேட்டு விளங்கிக்கொள்ளுங்கள். உங்களுக்குச் சரியாகப் புரியவில்லையாயின் திரும்பவும்கேட்டு புரிந்துகொள்ளுங்கள். தெரியாததை அல்லது விளங்காததைத் திரும்பக்கேட்பதில் வெட்கமுமில்லை, தவறுமில்லை. உங்கள் பாடங்களைக் கற்பதற்கு நீங்கள் சிறுசிறு குழுக்களாக இணைந்து படியுங்கள். இணைந்து படிக்கும்போது நிறைவிடயங்களைப் புரிந்துகொள்ளலாம். உங்களுக்கு விளங்காததை உங்கள் நண்பர்கள் சொல்லித்தரலாம். அவர்களுக்கு விளங்காததை நீங்கள் சொல்லிக் கொடுக்கலாம். கூட்டாக இணைந்து எதைச் செய்தாலும் பலம் கூடியதாகவே இருக்கும். 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பது உங்களுக்குத் தெரியும்தானே.

பாசமுடன் -சாரு அக்கா

## உங்களுக்குத் தெரியுமா?

நம் ஒவ்வொருவருக்கும் கைரேகைகள் வேறுபடும் என்பது உங்களுக்குத் தெரியும். அதுபோலவே - நமது நாக்கிலும் ரேகைகள் உண்டு. அதுவும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.

இரத்தம் நம் உடலினுள்ளே ஒருமுறை சுற்றிவர 60 செக்கன்கள் ஆகிறது.

நம் உடலில் 70 வீதம் நீரினால் உருவாகியிருக்கிறது. சராசரி மனிதனின் உடலில் 45 லீற்றர் நீர் இருக்கும்.

சில குளிர்பானங்களில் இனிப்புப் சுவைக்காக நிலக்கரி சேர்க்கப்படுகின்றது.

இங்கிலாந்தில் கால்பந்து தொடங்கப்பட்டபோது, 500 பேர்வரை ஒரு அணியில் இருந்தார்களாம்.

நத்தைகளால் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வரை உறங்க முடியும்.

தேனீக்கள் ஒரு லீட்டர் தேன் உருவாக்க - ஒரு மில்லியன் பூக்களில் தேன் சேகரிக்கவேண்டும்.

முதலைகள் பொதுவாக வருடத்தில் 50 தடவைதான் சாப்பிடுமாம்.

# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- சு. அனுசன்
கற்கும் பாடசாலை :-
ஏழாலை. மே. கை. ச. வித்தியாலயம்
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட்படம் சேகரித்தல்,
தொலைக்காட்சி பார்த்தல்.



முழுப்பெயர் :- ப. கஜேந்தினி
கற்கும் பாடசாலை :-
குப்பிளான் விக்கினேஸ்வரா
ம. வித்தியாலயம்
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
ஓவியம், கவிதை எழுதுதல்.

முழுப்பெயர் :- ப. கமலநாதன்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், வானொலிகேட்டல்,
தொலைக்காட்சி பார்த்தல்

முழுப்பெயர் :- ர. தர்சிகா
கற்கும் பாடசாலை :-
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வி, பொது அறிவு,
பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- சீ. சங்கீதா
கற்கும் பாடசாலை :-
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
சங்கீதம், விளையாட்டு, தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- சி. செந்தூரன்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கல்வித்துறை,
வானொலிகேட்டல்.

முழுப்பெயர் :- சி. வேணுகா
கற்கும் பாடசாலை :-
திருக்குடும்பக் கன்னியர் மடம்
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- த. அனுபவியா
கற்கும் பாடசாலை :-
அம்பன் அ. மி. த. க. பாடசாலை
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
வானொலிகேட்டல்.

முழுப்பெயர் :- பே. தர்சிகா
கற்கும் பாடசாலை :-
வைத்தீஸ்வராக் கல்லூரி.
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், சித்திரம்,
விளையாட்டு.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :..................................
கற்கும் பாடசாலை :..................................
கற்கும் தரம் :..................................
வீட்டு முகவரி :..................................
பிறந்த திகதி :..................................
ஆர்வமுள்ள துறைகள் :..................................
..................................

..................... திகதி ..................... ஒப்பம்

..................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ..................... பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



## கண்டு பிடிப்புக்கள்

1. ஒட்சிசன் வாயுவை கண்டுபிடித்தவர்?
ஜோசப் பிறிசி.
2. விசர் நாய்கடி மருந்தைக் கண்டுபிடித்தவர்?
லூயிபாஸ்ரர்.
3. டைனமோவை கண்டுபிடித்தவர்?
அல்பிரட் நோபல்.
4. கணிகருவியைக் கண்டுபிடித்தவர்?
சாள்ஸ் பபேஜ்.
5. இடிதாங்கியைக் கண்டுபிடித்தவர்?
பெஞ்சமின் பிராங்லின்.

ஆக்கம்:- த. தர்மராஜ்
பளை மத்திய கல்லூரி.

## உங்கள் கைவண்ணம்



ம. பார்த்திபன்
தரம் - 8
யாழ். மத்திய கல்லூரி.



லோ. ராஜீவ்
தரம் - 10
வைத்தீஸ்வராக் கல்லூரி.

## My Pet

My pet is Parrot. The Name of my parrot's 'Petty', It is a Green Colour. It has red beak. The parrot is a very beautiful. it likes to eat - Fruits and grains, it can fly well.
My petty says 'kee....... kee' It can talk well. I teed it well. I teed it every time. I take my meuls I keep my petty inacge.
I love my petty very much.

L.Ragulan
yeat - 7
Jaffna hindu colleye.

## கண்டுபிடியுங்கள்

கொள்ளையர்கள் - ரயிலை அடையும் வழியை அவர்களை முந்திக் கொண்டு, கண்டுபிடியுங்கள். பிறகு அவர்கள் ரயிலை நெருங்கமுடியாதபடி நடுநடுவில் உங்கள் பேனாவால், தடைகளை வரைந்துவிடுங்கள்.



## இலங்கை பற்றிய தகவல்

1. இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கப்பட்ட ஆண்டு?
1992.
2. இலங்கையில் தபால்சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
1857.
3. இலங்கையில் தொலைக்காட்சிச் சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு? 1978.
4. இலங்கையில் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்ட ஆண்டு? 1931
5. இலங்கையில் சனத்தொகை கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு? 1871.
6. இலங்கையில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
1921.
7. இலங்கைக்குப் போர்த்துக்கேயர் வருகைதந்த ஆண்டு?
1505.
8. இலங்கையில் நூதனசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
1877.
9. இலங்கையில் தாள் நாணயம் புழக்கத்திற்குவந்த ஆண்டு?
1885.
10. இலங்கையில் முதல்முதல் தேயிலை பயிரிடப்பட்ட ஆண்டு?
1867.

ம. நிரோசனா யாழ். இந்து மகளிர் கல்லூரி.

## சந்தேகம் – விளக்கம்

உங்களை -"அடிக்கடி எச்சிலைத் துப்பாதே" என ஆசிரியர் கூறுவது ஏனென்று தெரியுமா?
நமது வாய் சுத்தமாகவும், ஈரமாகவும் இருப்பதற்கு எச்சில் (உமிழ்நீர்) தான் உதவுகின்றது. அதில் உணவு சமிபாட்டுக்கு உதவும் "அமிலோஸ்" - Amylase எனும் நொதியம் உள்ளது. லைசோசம் - lysozyme எனப்படும். கிருமிக் கொல்லி நொதியம் அதில் அடங்கியுள்ளது. இவற்றைவிட சோடியம், பொட்டாசியம், காபனேற் போன்ற தாதுப்புக்களும் அதில் அடங்கியுள்ளன. நீங்கள் அடிக்கடி எச்சிலைத் துப்பினால், இத்தனையும் எச்சிலோடு வெளியேறிவிடும், வாய்வறண்டுவிடும், துர்நாற்றம் வீசும், கோளாறுகள் தோன்றும், நீங்கள் சாதாரணமாக இருக்கும்போது, அடிக்கடி எச்சிலைத் துப்புவதால் ஏற்படும் விபரீதங்கள் இவைதான் - இதனால் அஜீரணக் ...



இதனாலேயே அடிக்கடி எச்சிலைத் துப்பாதே என உங்களை எல்லோரும் எச்சரிக்கிறார்கள்.

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு வந்த உபகரணங்கள் வவுனியாவில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு வழங்கப்பட்ட 15 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் - வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் தேங்கிக் கிடக்கின்றன.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் மூன்றாம் நிலைக் கல்வியமைச்சினால் வழங்கப்பட்ட உறுதிமொழிக்கமைய, யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் நன்மைகருதி, சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்கியிருந்தது.

அவற்றை யாழ்.நோக்கி எடுத்து வந்த தென்பகுதி லொறிகள் வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் இறக்கிவிட்டுத் திரும்பிச் சென்றுள்ளன.

இந்த நிலையில், கடந்த ஒரு வாரமாக இந்த உபகரணங்களை எடுத்துவருவதற்கான வாகன ஒழுங்குகளைச் செய்யமுடியாதநிலையில் - அவை அங்கேயே தேங்கிக் கிடக்கின்றன.

எனினும், அவற்றை எடுத்துவருவதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக, யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் நா.யோகராஜன் தெரிவித்தார்.

இம்முறை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் சகல பாடநெறிக்கும் முன்னைய காலங்களைவிட இருமடங்கான மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இதனால், அங்கு நிலவக்கூடிய இடநெருக்கடிகளையும், உபகரணப் பற்றாக்குறையையும் தீர்ப்பதற்கு இந்த உபகரணங்கள் அவசரமாக எடுத்துவரப்படவேண்டியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ப)

# தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆலோசகர் யாழ்.பிரதிநிதிகளுடன் ஆராய்வு

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆலோசகரான லோறன்ஸ் திலகர் - அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், பல்வேறு நிறுவனங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்த வருடத்திலிருந்து குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித்திட்டங்களைத் துரிதகதியில் முன்னெடுப்பது தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழர புனர்வாழ்வுக்கழகம் ஊடாக மேற்கொள்ளவுள்ள செயற்திட்டங்கள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டதுடன், அபிவிருத்தி நோக்கிய செயற்பாட்டில் அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயற்படுவது தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புங்குடுதீவின் புனர்நிர்மாணம் தொடர்பாக ஆராய

# அரச அதிபர் தலைமையிலான குழு புங்குடுதீவுப் பகுதிக்கு விஜயம்!

புங்குடுதீவுக் கிராமத்தின் புனர்நிர்மாணம் தொடர்பாக ஆராய்வதற்காக, அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் - திட்டப் பணிப்பாளர் பூ.சுந்தரம்பிள்ளை, உதவித் திட்டப் பணிப்பாளர்களான வ.சத்தியசீலன், திருமதி மோகனேஸ்வரன் மற்றும் வேலணை பிரதேச செயலர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சுந்தரலிங்கம் ஆகியோர் நேற்றுமுன்தினம் முழுநாள் விஜயமாக வட இலங்கை சர்வோதயம், புங்குடுதீவு ஐக்கிய அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் அழைப்பை ஏற்றுச்சென்றனர்.

அரச அதிபர் தலைமையிலான குழுவினர்- புங்குடுதீவுக் கிராமத்தினை முழுமையாகச் சுற்றிப்பார்த்து, அந்தக் கிராம மக்கள் அனுபவிக்கும் பல்வேறுவகைப்பட்ட பிரச்சினைகளை அறிந்துகொண்டனா. இதனைத் தொடர்ந்து, வட இலங்கை சர்வோதய மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு, யாழ். பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் தலைமை தாங்கினார். பல்கலைக்கழக பொருளியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பேரின்பநாதனின் வரவேற்புரையைத் தொடர்ந்து, புங்குடுதீவுக் கிராமத்தின் இன்றைய அடிப்படைத் தேவைகள் பற்றிய மகஜர் ஒன்று அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் - அத்தியாவசிய பிரச்சினைகளாகக் கடந்த பதின்மூன்று வருடங்களாகச் செயலிழந்துள்ள புங்குடுதீவு வைத்தியசாலையை மீள இயங்கவைத்தல், வீதிகளைப் புனரமைத்தல், தூர்ந்துபோயுள்ள குளங்களை ஆழமாக்குதல், இறுப்பிட்டித் துறைமுகத்தை திருத்தி மீள இயங்கவைத்தல், நன்னீர் வழங்குவதிலுள்ள இடர்பாடுகளுக்குத் தீர்வை எட்டுதல், மீன்பிடித் தொழிலாளர் அனுபவிக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணல், அநாதரவாக விடப்பட்ட கால்நடைகளுக்கு மறுவாழ்வு அளித்தல், மின்விநியோகம் போன்ற பல பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. அத்துடன், கடந்த காலங்களில் எம்மால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் தீவுப்பகுதியின் இன்றைய நிலைக்கு தீர்வுகாணமுன்வரவில்லை எனக் கலந்துகொண்ட பலரும் எடுத்துக்கூறினர்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய அரச அதிபர் - வைத்தியசாலையை இயங்கவைப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன எனவும், மருத்துவர்கள் எவரும் இங்கு கடமையாற்ற முன்வருகிறார்களில்லை. எனினும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு விரைவில் இதற்குத் தீர்வு காண்பதாகக் கூறினார். அத்துடன், புங்குடுதீவு மக்கள் அனுபவிக்கும் நீர்ப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாணவுள்ளதாகவும், 2004 ஆம் ஆண்டில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட வீதிகளைப் புனரமைத்துக் கொடுக்கலாம் எனவும் எடுத்துக்கூறினார். மகஜரில் கொடுக்கப்பட்ட மற்றும் பல அடிப்படைத் தேவைகளை- விரைவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு ஆவன செய்வதாகவும் உறுதியளித்தார்.

இந்தக் கூட்டத்தில் - வட இலங்கை சர்வோதய பணிப்பாளர் ஜமுனாதேவி, அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம், கிராம அலுவலர்கள் ஆகியோர், அடிப்படைத் தேவைகளின் அவசியம் பற்றி எடுத்துக்கூறினர். இந்தப் பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## வடலியடைப்பு கிராமத்தின்

# அவசிய வேலைத்திட்ட முன்மொழிவுகள் பிரதேச செயலாளரிடம் சமர்ப்பிப்பு

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு கிராமத்தில் மேற்கொள்ளவேண்டிய அவசிய வேலைத் திட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டு, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் சம்பந்தமான முன்மொழிவுகளைத் தயாரித்து, தமக்குச் சமர்ப்பிக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் இந்தப் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

அதனையடுத்தே, வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் தனது எல்லைக்குட்பட்ட வேலைத்திட்டங்களைத் தெரிவுசெய்து, அதிலும் மிகவும் அவசியமான திட்டங்களை பிரதேச செயலகத்திடம் ஒப்படைத்துள்ளதாகச் சங்கத்தின் தலைவர் க.அரசரத்தினம் தெரிவித்தார்.

முன்பள்ளிக்கான நிரந்தரக் கட்டடம் நிறுவுதல், ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவுதல், இருபது வருடங்களுக்கு மேலாகப் புனரமைப்பு செய்யப்படாத வீதிகளைப் புனரமைத்தல், விவசாய பொதுக் கிணறுகளைப் புனரமைத்தல், வடலியடைப்பு வட்டக்குள வாய்க்கால்களை ஆழமாக்கிப் புனரமைத்தல், மின்சாரம் வழங்கப்படாத இடங்களுக்கு மின் வழங்குதல் ஆகிய முக்கிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(43)



அண்மையில் ஆனைக்கோட்டை பாரதி சனசமூக நிலையத்தில் ஆனைக்கோட்டை உயரப்புலம் கிராம சேவையாளராகக் கடமையாற்றி இளைப்பாறிய மு.பூ.சிவபாதசுந்தரத்தின் பாராட்டு விழாவில்- நிலைய தலைவர் ஆ.சி.கணேசவேல் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (46)



யாழ்.நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா, அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்விவலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் அவர் பாரியாரும் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் பாடசாலை அதிபர், உப அதிபர், அபிவிருத்திச் சங்கச் செயலாளர் மற்றும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம். (55)

## சின்னஞ் சிறு செய்திகள்

### வீதி விளக்கு அமைக்கக் கோரிக்கை

சித்தங்கேணி - பண்டத்தரிப்பு பிரதான வீதியில் - பொதுமக்கள் நலன்கருதி, மின் விளக்குகள் அமைக்கப்படவேண்டும் என, வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கம்- இலங்கை மின்சாரசபையின் வட்டுக்கோட்டை அலுவலகப் பொறுப்பதிகாரியிடம் கடிதம்மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தப் பகுதிகளில் இரவுவேளைகளில் திருடர் நடமாட்டம் மற்றும் மதுபோதையில் செல்வோரின் அட்டகாசம் என்பன அதிகரித்துவருவதால், இந்த வீதியில் - வீதி மின் விளக்குகள் அமைக்கப்படவேண்டும் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (43)

### திருவாசக முற்றோதல்

வருடம்தோறும் மார்கழி மாதம் வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் திருவாசக முற்றோதல், நாளை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

### மழைவேண்டி கொடும்பாவி எரிப்பு

(மானிப்பாய்)

கந்தரோடைப் பகுதியில் மழைவேண்டி பிரார்த்தனையும், கொடும்பாவி எரிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கந்தரோடை மேற்கு ஞானவைரவர் சனசமூக நிலைய உறுப்பினர்களும், 100 இற்கு மேற்பட்ட பொதுமக்களும் ஒன்றுசேர்ந்து, ஞானவைரவர் ஆலயத்தில் பிரார்த்தனையில் ஈடுபட்டு, அதன் பின்பு கொடும்பாவி கட்டி, சுற்றாடலில் அமைந்துள்ள வீதிகளில் இழுத்துவரப்பட்டு, ஒவ்வொரு வீட்டு வாசல்களிலும் மழைவேண்டி ஒப்பாரிப் பாடல்களும் பாடப்பட்டு, இரவு 1 மணியளவில் சங்கம்புலவு இந்து மயானத்தில் எரிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் காணப்படுகின்ற நெல்வயல்கள் வறட்சியால் அழிவடையும் நிலையிலுள்ளதையடுத்தே, அண்மையில் புதிய நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற ஞானவைரவர் சனசமூக நிலைய உறுப்பினர்கள் இதனை மேற்கொண்டனர். (42)

# தமிழீழ வைப்பகக் கிளை முழங்காவிலிலும் திறப்பு!

(முழங்காவில்)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு - தமிழீழ வைப்பகத் தின் புதிய கிளையொன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

முழங்காவில் பகுதியிலேயே எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 10 மணியளவில் இந்தக் கிளை திறந்துவைக்கப்படவுள்ளது.

முழங்காவில் பகுதி மக்களின் வங்கி நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் நோக்கில் இந்த புதிய கிளை செயற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடன்

# பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழக 10 ஆம் ஆண்டு நிறைவு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி, பாரம்பரிய கலைகளின் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் இசை நாடகம், கூத்து, கிராமியக் கலைகளின் போட்டிகளை நடத்தவுள்ளது.

இந்தப் பாரம்பரிய கலைகளின் போட்டிகள்- கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. காத்தவராயன் கூத்துப் போட்டிகள் நாளையும், நாளைமறுதினமும் - இசை நாடகப் போட்டிகள் 17 ஆம், 18 ஆம் திகதிகளில்- தெனமோடிக் கூத்து 24 ஆம், 25 ஆம் திகதிகளிலும் - உடுக்கு, ஆர்மேனிய வாத்தியப் போட்டி 31 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இவற்றுடன் கிராமியப் பாடல் போட்டி பெப்ரவரி முதலாம் திகதியும்- வில்லுப்பாட்டு, மயிலாட்டம், ஒயிலாட்டம், குதிரையாட்டம் ஆகியவற்றுக்கான போட்டி 4 ஆம் திகதியும்- கரகம், காவடி 5 ஆம் திகதியும் - கிராமிய நடனங்கள் 7 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது.

பாரம்பரிய கலைகளின் கலைஞர்களை ஊக்குவிக்கும் இந்தப் போட்டிகளில் - ஒவ்வொரு பகுதியிலும் அதிகளவு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதுடன், அநேகமான இளம் கலைஞர்களும் பங்குகொள்ளவுள்ளனர். இப்போட்டிகளில் வெற்றி பெறும் கலைஞர்களுக்குப் பெறுமதியான பரிசில்களுடன், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (91)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



பெயர் : சு.கவிஸ்ரஸ்யோணசன்
முகவரி : இல 47/2, சிவநகர், உருத்திரபுரம்.

## வாரநோக்கு

# சில்லறையாக மாறும் பல்கலைக்கழக நிர்வாகம்




கடந்தவாரம் குடாநாட்டின் அரசியல் அரங்கில் மட்டுமல்லாது, சமூகத்தள அரங்கிலும் சில முக்கியமான சம்பவங்கள் நடந்தேறின. ஆனால், சமுகத்தள சம்பவங்களுக்கும் ஏதோவொரு வகையில் அரசியல் பின்னணிகள்தான் காரணமாக அமைந்துள்ளது போலப்படுகிறது.

அரசியல் அரங்கைப் பொறுத்தவரையில், நடைபெற்ற முக்கிய சம்பவமாக மல்வத்தை பௌததபீடாதிபதியின் யாழ்ப்பாண வருகையைக் குறிப்பிட்டுச் சொல்லமுடியும். அவரது வருகைக்குப் பின்னால் பல செய்திகள் மறைந்து போயுள்ளன. நயினாதீவு ரஜமகா விகாரையில் புத்தர் சிலை ஒன்றை நிறுவுவது தொடர்



பாக விளக்கமளிப்பதற்காகவே தேரர் குடாநாட்டிற்கு வருகை தந்தார் எனக் கூறப்பட்டபோதிலும், அவரது வருகையை முக்கியமானதொன்றாகவே கருதவேண்டியுள்ளது.

வெறும் நாலடி உயரமுள்ள புத்தர் சிலையை நயினாதீவில் ஏற்கனவே, தொன்றுதொட்டு இருந்துவரும் விகாரையில் பிரதிஸ்டை செய்வது பிரசித்தப்படுத்தக்கூடிய வகையிலான விடயமாகப்படவில்லை. அந்த சிலையை நிறுவுவது தொடர்பாக விளக்கமளிப்பதற்கான செய்தியாளர் மாநாடொன்றும் பலாலி விமானத்தளத்திலே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த மாநாட்டிலேதான் மல்வத்தை பீடாதிபதி கலந்துகொள்வதாகவும் இருந்தது. ஆனால், இறுதி நேரத்திலே இந்தச் செய்தியாளர் சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டு, பலவித சிரமங்களுக்கு மத்தியிலே பலாலிக்குச் சென்ற குடாநாட்டு ஊடகவியலாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிவந்தது வேறு கதை.

இந்த நாட்டின் அதியுயர் பதவிகளாகக் கருதப்படும் ஜனாதிபதியோ அல்லது பிரதமரோகூட பௌத்தமத பீடாதிபதிகளைச் சந்திப்பது என்பது சாதாரணமான காரியமல்ல. ஏனெனில், எந்த நாட்டிலும் இல்லாத ஒரு வழக்கமாக இலங்கையிலே ஒரு நடைமுறை காலம் காலமாக இருந்துவருகிறது. அதாவது, நாட்டின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிய சக்திகளாக மதத்தலைவர்கள் - குறிப்பாகப் பௌத்தமத பீடாதிபதிகள் இருந்துவருகின்றமைதான்.

இலங்கை இனப்பிரச்சினை நோக்கிய தீர்வு எவ்வாறு அமையப்போகிறது என்பதைத் தீர்மானிக்கக்கூடிய சக்திகளாகவும் இந்த மதபீடங்கள் இருந்துவருகின்றன. எனவே, இந்த நிலையில், முக்கியமானதொரு மத பீடத்தைச் சேர்ந்த தலைமைத்துறவி- யாழ்ப்பாணத்திற்கு வந்துபோயிருக்கும் விடயத்தை நாம் சாதாரணமானது எனப் போட்டுவிடமுடியாது.

புத்தர் சிலை நிறுவுவது தொடர்பாகப் பேசவே அவர் வந்தார் எனக் கூறப்பட்டாலும், அரசியல் நோக்கிலேயே இந்த வருகை அமைந்துள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்த வரையிலே அவர்கள் பௌத்தமத பீடங்களைத் தமது எதிரிகளாக எண்ணுகின்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். சாதாரண ஒரு தமிழ் பொதுமகனுடன் கதைத்தாலும், அவர் புத்தபிக்குகள்மீது குற்றம் சாட்ட தவறுவதில்லையென்பதைக் காணமுடியும்.

இந்த மனோநிலையிலுள்ள தமிழ் மக்களின் மனநிலையை மாற்ற வேண்டிய அவசியம் - பௌத்தமத பீடங்களுக்கு மட்டுமல்ல, அவர்களின் வாக்கைத் தெய்வவாக்காக மதித்துச் செயற்படும் அரசியல்வாதிகளுக்கும் எடுத்துள்ளது. இதனாலேயே புத்தசிலை நிறுவுவது எனும் சாதாரணவிடயத்தை மையமாக வைத்துப் பௌத்தமத பீடாதிபதியொருவரை யாழ்.மண்ணிற்கு அழைத்து வந்திரு[illegible]றார்கள்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி, யாழ்ப்பாணம் இன்று தமிழ் மக்களின் உணர்வுகளை நாடிபிடித்துப் பார்க்கும் களமாக மாறிவருகிறது. எனவே, இங்கு பௌத்தமத பீடாதிபதியின் வருகைக்கு எவ்வாறான தொரு வரவேற்பு இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளச் சிலர் ஆசைப்பட்டார்கள். ஆனால், அவர்களது உள்ளத்தின் எங்கோ ஒரு மூலையில் சிறிய அச்சவுணர்வும் தோன்றத்தவறவில்லை. ஏனெனில், அவர்கள் ஏற்கனவே சூடுகண்ட பூனைகள் அல்லவா? அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா - ஒரு சமயம் யாழ்ப்பாணம் வந்துபோது, யாழ்.பல்கலைக்கழகத்துக்கு ஒரு விசேட நிகழ்விற்காகச் சென்றபோது, மாணவர்களால் தடுத்துநிறுத்தப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்ட சம்பவத்தை அவர் இலகுவில் மறந்துவிடமாட்டார். அதனாலேயேதான், ஒழுங்கு செய்த இந்த மல்வத்தை பீடாதிபதியின் வருகையையும் முன்கூட்டியே திட்டமிட்டுச் செய்தியாளர் சந்திப்பையும் பலாலி விமானத்தளத்திலே வைத்திருந்தார்.

எங்கே யாழ்.நகருக்குள் செய்தியாளர் மாநாட்டைக் கூட்டினால், திரண்டுவரும் பொதுமக்கள் அதனைத் தடுத்து நிறுத்திவிடுவார்களோ என்ற அச்சம் அவர்களுக்கு இல்லாமல் இல்லை. இதனால், குடா நாட்டு ஊடகவியலாளர்களைத் தமக்கு வசதியான இடத்திற்கு அழைத்தார்கள். ஆனால், அவமதித்துத் திரும்பி அனுப்பினார்கள்.

பின்னர், யாழ். நாகவிகாரையிலே ஒரு செய்தியாளர் சந்திப்பு இடம்பெற்றது. இதனையொட்டி இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளுக்காக - யாழ். நாகவிகாரையின் அகச்சூழல் மட்டுமல்ல, அதாவது புறச்சூழலும் வெகுவாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது. வீதிகள் தோறும் கம்பங்கள் நாட்டப்பட்டு, பௌத்தமதக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

இந்த இடத்திலே ஒரு விடயத்தை ஞாபகமூட்டுவது பொருத்தமானதாகப்படுகிறது. கடந்தவருடம் நடைபெற்ற மாவீரர் தினக்கொண்டாட்டங்களின்போது, யாழ்.முனிஸ்வரன் வீதி நடைபாதை வியாபாரிகள் - மாவீரரை நினைவிருத்தும் பதாகை ஒன்றை கட்டமுற்பட்டபோது, படையினர் அதனைத் தடுத்து நிறுத்தினர். அப்போது ஒரு வர்த்தகர் - இராணுவத்தினரைப் பார்த்துக் கேட்டார்- "நீங்கள் எமது மண்ணிலே வெசாக்கிற்கு கொடி கட்டலாம் எனில், நாம் ஏன் மாவீரர் நாளுக்குக் கொடிகட்ட முடியாது?" என்று நியாயமான கேள்வி. இந்த விடயம் சிந்தனைக்குரியதல்லவா? அந்த உணர்வு - நாகவிகாரையை பார்த்தபோது, எமக்குள்ளும் எழுந்தது.

அரசியல்வாதிகள் எதிர்பார்த்தது போலவே ஒரு சில விடயங்கள் நடந்தாலும் - எல்லாம் திட்டமிட்டபடி நடைபெறவில்லையென்றுதான் கூற வேண்டும். எதிர்ப்புக்கள் எதுவுமின்றி, மல்வத்தை பிடாதிபதி வந்துசென்றமை - வெற்றியாகப்பட்டாலும், அவரது வருகை - குடாநாட்டு தமிழ் மக்களது மனங்களிலே பெரியதொருதாக்கத்தை ஏற்படுத்தவில்லையென்பது, அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையிலலே ஏமாற்றமான விடயமே!

இவ்வாறு பீடாதிபதியின் வருகை- பிரசித்தம் பெறாமற்போனாலும், ஊடகவயலாளர்கள் - படையினரால் அவமதிக்கப்பட்ட சம்பவமானது - மிகவும் பிரசித்தம்பெற்றது. தாமாகவே முன்வந்து அரச அதிகாரிகள்மூலம் அழைத்துச்சென்றுவிட்டு, திருப்பி அனுப்பியுள்ளார்கள். குறிப்பிட்ட ஒரு செய்தியாளரின் பெயரை விசாரித்து அறிந்த படையினர், அவரை அனுமதிக்க மறுப்பதற்குப் பதிலாக, மொத்த செய்தியாளர்களையுமே அனுமதிக்கவில்லை. இந்த விடயம் குடாநாட்டு ஊடகவியலாளர்கள் மத்தியிலே பெரும் விசனத்தையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளமை தெளிவானதாகும்.

அரசியல் அரங்கைப் பொறுத்தவரையிலே, இந்த விடயமானது - முக்கியமானதாகக் கருதப்படும் அதே வேளை, சமூகத்தள அரங்கிலும் விபரிக்கப்படவேண்டிய சில விடயங்கள் நடந்தேறியுள்ளன. யாழ். பல்கலைக் கழகச் சமூகம், சில நாட்களாகக் கொந்தளிப்பதும், பின்னர் அடங்குவதுமாக இருந்துவருகிறது. ஒரு முறை மாணவர்கள் எனின், மறுமுறை ஊழியர்கள் எனக் கொந்தளிப்புக்கள் மாறிமாறி நடந்தேறிய வண்ணமுள்ளன.

அண்மைக் காலமாக நடைபெற்று வரும் சில சம்பவங்கள் - யாழ். பல கலைக்கழக நிர்வாகம் சில்லறையாக மாறிவிட்டதா? என எண்ண வைக்கின்றது. நுண்கலைப் பீடத்திலே இசைத்துறை தலைவரை - அவரது அறையிலே வைத்து மாணவர்கள் பூட்டினார்கள். பின்னர் துணைவேந்தர், பேரவை உறுப்பினர்களை - மருத்துவ மாணவர்கள் அறைக்குள் வைத்துப் பூட்டினார்கள். அதன் தொடர்ச்சியாகத் தமது பங்குக்கு ஊழியர்களும் - துணைவேந்தரை அவரது அலுவலகத்திற்குள் வைத்துப் பூட்டிவிட்டார்கள். இவ்வாறு -

சிறிது காலமாகப் பூட்டுத்திறப்பு கலாசாரம் எமது பல்கலைக்கழகத்திலே ஒரு கலையாக வளர்ந்து வருகிறது. அரம்பிக்கப்படவேண்டிய தேவையிலே எத்தனையோ பீடங்கள் இருக்கின்றபோது, இனி "பூட்டுத் திறப்பிற்கும்" ஒரு பீடம் அமைந்துவிடுமோ என ஆச்சரியப்படவேண்டியுள்ளது.

இன்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரும், அவர் சார்ந்த நிர்வாகத்தினரும், வெற்றிலைப் பெட்டி போல மாறிவிட்டார்கள். யாவரும் அவர்களை ஏசலாம். விரும்பினால், அறைக்குள் சிறைவைத்துப் பூட்டலாம். இந்தநிலை தொடர நாம் அனுமதிப்போமாக இருந்தால், சிறிது சிறிதாக நாம் இழந்துவரும் எமது கல்விப் பாரம்பரியத்தை, முற்றாக இழந்து, கேலிக்குரியவர்களாக மாற வேண்டிவரும். சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயம் தொடர்பாகக் கவனமெடுக்கவேண்டியது அவசியமானதும், அவசரமானதுமான விடயமாகும்.

இவ்வாறானதொரு சம்பவம் வேறொரு பல்கலைக்கழகத்திலே நிகழுமாக இருந்தால், நிலைமை பாரதூரமாக அமைந்திருக்கும். அதாவது, இந்தப் பூட்டுத் திறப்பு கலாசாரத்துடன் தொடர்புடைய மாணவர்களும், ஊழியர்களும் - பல்கலைக்கழகத்தில் இருந்தே இடைநிறுத்தப்பட்டிருப்பார்கள். ஆனால், அவ்வாறு ஒரு முடிவை எடுக்கக் கூடிய துணிவு, இன்றுள்ள பல்கலைக்கழக நிர்வாகத்திலே இல்லைப்போல தெரிகிறது.

இந்த நிலைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஒன்று - நிர்வாகிகளின் தூய்மையின்மை. அதாவது, தவறுகளைச் செய்யத்துணிந்து, தப்புக்களைப் புரிந்து, அவை வெளியே கசிந்து போய்விட்டதால், எதிர்த்து நிற்கும் திராணியை அவர்கள் இழந்திருக்கலாம். இந்த நிலை மாற வேண்டுமாக இருந்தால், மீண்டுமொரு பேராசிரியர் துரைராஜா உருவாக வேண்டும்.

இரண்டாவது - நிர்வாகத்திற்குச் சிலவேளைகளிலே ஒரு அசட்டுத் துணிவு வந்து, நாம் கூறியதுபோல, சம்பந்தப்பட்டவர்களைப் பல்கலைக் கழகத்திலிருந்து இடைநிறுத்துவார்களாக இருந்தால், நர்வாகத்தின் இந்த முடிவை எதிர்ப்பதற்கே பலர் துணிவார்கள். உதாரணமாக - பகிடிவதையை மோசமாகப் புரிந்த மாணவனை இடைநிறுத்தும்போது, அதனைக் கண்டித்துப் பகிஷ்கரிப்பில் ஈடுபடக்கூடிய மாணவர்கள் கூட்டமும் இருந்துவருகிறது. இந்தநிலை ஆரோக்கியமானதொரு சமூகத்திற்கு உரித்தானது அல்ல. தவறுகள் கண்டிக்கப்பட்டு, தப்புகள் தண்டிக்கப்படும்போதே - சிறந்ததொரு சமூகக் கட்டுக்கோப்பை உருவாக்கிக்கொள்ள முடியும். இதற்குத் தடையாகவே ஒரு சமூகம் வளர்ந்து வருமாக இருந்தால், நாம் திசைமாறிப் பயணிக்கிறோம் என்பதே அதன் அர்த்தமாகும்.

தற்போது, பல்கலைக்கழகத்திலே ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றிலே ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் நிர்வாகத்திற்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்களை மட்டைகளில் எழுதி, பல்கலைக்கழக வளாகம் முழுவதும் ஒட்டிவைத்துள்ளார்கள்.

பின் கதவு நியமனங்களை உடனே நிறுத்து, பல்கலைக்கழகத்தைத் தனியார் மயமாக்காதே என்பன உட்படப் பல சுலோகங்களே இந்த மட்டைகளில் எழுதப்பட்டுள்ளன. ஊழியர்கள் சொல்வதிலும் நியாயம் இல்லாமல் இல்லை. ஆனால், இந்த விடயங்களுக்குப் பல்கலைக் கழக நிர்வாகம் மட்டும்தான் காரணம் என நினைத்து, அதனைக் குழப்பமுயல்வதும், உச்சக்கட்டமாக நிர்வாகிகளை அவர்களது அலுவலக அறைகளிலே வைத்துப் பூட்டுவதும் தான் ஏற்றுக்கொள்ளமுடியாத விடயமாகவுள்ளது.

பல்கலைக்கழகத்திற்கு அரசு மூலமாக வழங்கப்பட்ட பேருந்து ஒன்றிற்கு - சாரதியை அமர்த்துவது தொடர்பாகவும், சில குறிப்பிட்ட வேலைகளுக்கு ஊழியர்களை அமர்த்துவது தொடர்பாகவுமே முக்கியம் கொடுத்துப் பேசப்படுகின்றன. ஆனால், இந்த நியமனங்கள் அனைத்துமே - அரசியல்வாதிகளின் அதிகாரப்போக்கின் காரணமாகவே நிகழ்ந்து வருகின்றமை, இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய விடயம். குறிப்பாகக் குடாநாட்டின் ஒரு முக்கிய அரசியல்வாதி இந்த விடயங்களோடு தொடர்புபட்டுள்ளார். துணைவேந்தர் தெரிவிலேகூட, இவர் ஜனாதிபதி மட்டத்திலேகூட தனது செல்வாக்கைப் பிரயோகித்துப் பார்த்தும் பிரயோசனம் இல்லாமல் போனது பழைய கதை.

இந்த அரசியல்வாதியின் செயற்பாடுகளை விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளவேண்டிய தேவை - பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு இருக்கிறது. இதனைத் தெளிவாக ஊழியர்கள் புரிந்துகொள்வார்களாக இருந்தால், அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் இடமும், அறைக்குள் வைத்துப் பூட்டப்படவேண்டிய நபரும் வேறாகவே இருக்கும் என்பது, புரிந்துகொள்ளக்கூடிய விடயமாகும்.

இதைவிடுத்து, மாணவர்கள் மாறி ஊழியரும், ஊழியர்கள் மாறி மாணவர்களும் என ஆர்ப்பாட்டத்திலும், வேலை நிறுத்தத்திலும் ஈடுபடுவது பயனற்றவிடயமாகும். நாம் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டியதும், வேலை நிறுத்தத்தில் ஈடுபடவேண்டியதுமான விடயங்கள் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் உள்ளன.

பல்கலைக்கழகங்களுக்கான நிதி ஒதுக்கீட்டின்போது, யாழ். பல்கலைக்கழகம் வெகுவாகப் புறக்கணிக்கப்பட்டமையும், பல்கலைக்கழகத் தெரிவுகளின்போது, மாணவர்கள் பாதிக்கப்பட்டமையுமென முக்கியமான பல விடயங்கள் எம்முன்னே உள்ளன. இவற்றைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்திலும், வேலைநிறுத்தத்திலும் ஈடுபடுவோமாக இருந்தால், அது எமக்கு மட்டுமல்ல, எமது இனத்திற்கே செய்யும் பேருதவியாக அமையும், இதனை உரியவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்,

வேலை நிறுத்தத்தையே எமது பாரம்பரியமாக மாற்றிவருவோமாக இருந்தால், எமது பொருளாதாரம் மட்டுமல்ல, கல்வித் தராதரம்கூட சிதைந்துபோகக்கூடிய அபாயம் உள்ளது. ஜப்பான் நாட்டு மக்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்போது, கறுப்புப்பட்டி ஒன்றை அணிந்தவாறு வேலையிலே ஈடுபடுவார்களாம். ஏனெனில், தமது சில நாள் வேலை நிறுத்தம் காரணமாக - நாடு பலநாள் பாதிப்புக்களை எதிர்கொள்ளக்கூடாது என்பதற்காக. எனவே, நாம் கற்றுக் கொள்ளவேண்டியவை நிறையவே உள்ளன.

உரியவழியிலே பிரச்சினைகளுக்கான தீர்வுகளை அணுகமுற்படவேண்டுமே தவிர, எமது அணுகுமுறைகள் மேன்மேலும் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பனவாக அமைந்துவிடக்கூடாது. இதனைப் பல்கலைக் கழக மாணவர்கள், ஊழியர்கள் மட்டுமல்ல, நிர்வாகிகளும், ஏன் அரசியல்வாதிகளும் உணர்ந்துகொள்ள வேணடும். இல்லாதுபோனால், உணர்த்தப் படவேண்டிய அவசியம் எழும்.

எமது சாதாரண மக்களால் உயரவான இடத்திலே வைத்துநோக்கப் படும் பல்கலைக்கழகத்தை - நடு வீதிக்குக் கொண்டுவந்து, நாறடிக்கும் செயலை நிறுத்துவோம். அமைதிவழியிலே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலும் ஒரு இனத்தைச் சேர்ந்து நாம் - எந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் அமைதி வழியையே நாடுவோம் அதன்மூலமாக நாம் மட்டுமல்ல, நாமும் வளம் பெறமுடியும்!

**யாழவன்**

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.*

- தமிழ்ப்பழமொழி.

## நமது நோக்கு

### அழிவை ஏற்படுத்தும் கழிவுப் பொருட்கள்

'கழிவுப்பொருட்களைக் கண்ட கண்ட இடங்களில் தன்னிச்சையாக வீசுவதையோ, குவித்து வைப்பதையோ, தவிர்க்கவும்' என்று யாழ்.மாநகரசபை - பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளது. இது ஒன்றும் புதிய விசேடமான செய்தியைச் சுமந்து வரும் அறிவித்தலல்ல. பழமையானதும், வழமையானதுமான அறிவுறுத்தலை உள்ளடக்கிய ஒன்றேயாகும்.

'சுத்தம் சுகம் தரும' என்ற பழமொழியும் நமக்கு சிறு வயது முதலே கற்பிக்கப்பட்டு வந்துள்ள ஒன்றுதான்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது நமக்கு தெரியாததொன்றல்ல.

எம்மைச் சுற்றிலும் எத்தனையோ அறிவுறுத்தல்கள், வேண்டுகோள்கள், தாழ்மையான விண்ணப்பங்கள், நம் பார்வைகளை ஈர்க்கும் விதத்தில் எச்சரிக்கையூட்டும் விதத்தில் - போகுமிடமெங்கும், திரும்பிய திசையெங்கும், நம்மை விழிப்புடன், நம்மீதான அக்கறையுடன், செயற்படத் தூண்டிய வண்ணம் தென்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

பகுத்தறிவுள்ள ஒரு ஜீவனுக்கு இப்படியான அறிவுறுத்தல்கள் எதுவும் தேவையற்ற விடயங்கள் என்பதில் ஐயமில்லை.

அனைத்தையும் சுயமாகச் சிந்தித்து, சரியானதெதுவோ அதனைத் தேர்வு செய்து, அதன்படி இயங்க மனித அறிவுக்கு திறனுண்டு.

ஆனால், அந்த அறிவை எவரும் சரியாகப் பயன்படுத்துவதில்லை என்பதன் வெளிப்பாடாகவே இத்தகைய அறிவுறுத்தல்களை கருதவேண்டியுள்ளது. சிலர் சொல்வார்கள் - சிங்கப்பூரின் தெருக்களில் குப்பை கூழங்கள் மற்றும் கழிவுப்பொருட்களைக் காணவேமுடியாதென்று. அதற்கு நேர்மாறாக குப்பைகளும், கழிவுப்பொருட்களும் இல்லாத வீதிகளையோ, தெருக்களையோ நம் நாட்டில் காணமுடியாதுள்ளது. என்பதும் உண்மையே. இதற்கு முக்கிய பிரதான நகர்களில், பிரதான வீதிகள்கூட விதிவிலக்கல்ல என்ற நிலையில் - ஒழுங்கைகள், குச்சொழுங்கைகள், சிறு வீதிகள் ஆகியனவற்றின் நிலை எப்படி இருக்கும் என்பதை விபரிக்கவேண்டியதில்லை.

எமது மக்கள் சுத்தமானவர்கள், அழகை நேசிப்பவர்கள், அலங்காரத்தில் பிரியமானவர்கள், தங்கள் வீட்டை, காணியை, தோட்டத்தை, மிகவும் தூய்மையாக வைத்திருப்பதில் ஆர்வமுள்ளவர்கள்.

ஆனால், அவர்கள் வீடுகள் அனைத்திலும் நாள்தோறும் குப்பை கூழங்களும், கழிவுப்பொருட்களும் சேர்ந்த வண்ணமேயுள்ளது.

அவற்றை அவர்கள் வீட்டுக்குள் சேமித்துவைக்கவோ, அல்லது எரித்துப் புதைக்கவோ, அழித்துவிடவோ முடியாத சூழல் பெரும்பாலானோர் வீடுகளில், குறிப்பாக நகர்ப்புற வீடுகளில் - நிலவுவதும் உண்மையே.

இதன்காரணமாக, அவற்றை அவர்கள் வீதிக்கரைகளில், தெருமுனைகளில் - ஏன் சிலர் தமது வீடுகளின் வெளிப்புறத்திலும், எதிர்வீட்டின் மதிலோரமும்கூட கொண்டு வந்து குவித்துவிட்டுப் போய்விடுகிறார்கள். இந்தக் கழிவுகள் பல்வேறு தன்மைகளைக் கொண்டவைகளாகும். இவற்றில் இறந்துபோன எலிகள், பூனைகள் போன்றவைகளும், மாமிச உணவுக்கழிவுகளும்கூட அடங்கும்.

இவற்றில் இருந்து எழும் துர்நாற்றம் - சுற்றுச் சூழலில் காற்றை மாசடையச் செய்வதுடன், பல்வேறு நோய்களும் பரவக் காரணமாகியும் விடுகின்றது.

மழைக் காலங்களில் கரைபுரண்டு ஓடும் வெள்ளத்தில் அள்ளுப்பட்டு, வீதியெங்கும் பரந்து செறிந்து அசிங்கமாகச் சேறும், சகதியும் நிறைந்த குண்டும் குழியுமான வீதிகளில் நுதம்பிக் கிடப்பதை - அதனைப் பொறுப்பின்றி வீதிகளில் போட்ட மக்களே, பார்த்து, அருவருத்து, முகம் சுழிப்பதையும் பார்க்கவே செய்கின்றோம்.

ஆனாலும், எவருமே அந்த அசிங்கமான சூழலை உருவாக்கியதில் - தமக்கும் பங்குண்டென்பதை உணர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை. ஒரே தவறையே மீண்டும் மீண்டும் தொடர்ந்து செய்பவர்களாகவேயுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றங்கள்தான் இத்தகைய சுகாதாரப் பணிகளைப் பொறுப்பேற்று செய்யவேண்டியவர்கள். ஆனாலும், மக்களின் ஒத்துழைப்பின்றி அவர்களால் அவர்களிடமுள்ள வளங்களை வைத்துக்கொண்டு எதனையும் முழுமையாகச் செய்யமுடியாதென்பதும் உண்மையே.

இந்தநிலையில், கழிவுப்பொருட்களினால் ஏற்படக்கூடிய சுகாதாரச் சீர்கேடுகள் - மக்களையே பாதிக்கும், அவர்களின் இயல்பு வாழ்க்கையையே பாதிக்கும் என்பதால், அவர்களே இது போன்ற விடயங்களில் ஒருங்கிணைந்து ஏதாவது உருப்படியான நடவடிக்கையை எடுக்கவேண்டியது அவசியமாகும்.

அரசு எமது பகுதிகளின் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு வேண்டிய சாதனவசதிகள், நிதி ஒதுக்கீடுகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்துகொடுப்பதில் காட்டும் 'அக்கறையின் விறுத்தம்' குறித்துப் பல தசாப்தங்களாகவே மக்கள் அறிவர்.

இந்த நிலையில், நமது வீடுமட்டுமல்ல, நமது அயலும், அவை சார்ந்த இடங்களும்கூட சுத்தமானதாக இருப்பது- நமது ஆரோக்கியத்திற்கு அவசியம் என்பதை நாமே உணர்தல் அவசியம்.

வீட்டிலிருந்து நாம் வெளியே வீசிவிடும் கழிவுகளின் தாக்கம் - நம்மையறியாமலே நமக்குள் ஊடுருவி, நமக்கே பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நாம் அறிவியல்ரீதியாகச் சிந்தித்து உணர்தல் அவசியம்.

## நாடும் நடப்பும்

**செய்தி** : சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகளிடையே புரிந்துணர்வுடன் கூடிய ஒருங்கிணைந்த செயற்பாட்டின் அவசியம் உச்சிமாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.



# இராணுவத்தினர் இயல்புவாழ்வை தோற்றுவித்தால் அதனை முழுமனதுடன் நாம் வரவேற்போம்

## யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன்

இராணுவத்தினர் இயல்புவாழ்வை ஏற்படுத்துவார்களாக இருந்தால், அதனை நாம் முழுமனதுடன் வரவேற்கின்றோம் என, யாழ். மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்தார்.

போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நேற்று யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின், செய்தியாளர்களுடன் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் முக்கியமாக ஆராயப்பட்ட விடயங்கள் எவையெனக் கேட்டபோது - இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பது தொடர்பாகவே முக்கியமாக கலந்துரையாடப்பட்டது. இந்த இயல்புவாழ்வை தோற்றுவிப்பதற்குப படையினர் ஒத்துழைக்கவேண்டும். அத்தோடு, எமது மக்களால் கொண்டாடப்படும் மாவீரர் தின எழுச்சி நிகழ்வுகள் போன்ற நிகழ்வுகளுக்குப் படையினர் இடையூறாக இருக்கக் கூடாது எனவும் எம்மால் கேட்கப்பட்டது.

மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது. எம்மால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட படைத்தரப்பு- தாம் ஒத்துழைப்பைத் தருவதாக எமக்கு உறுதியளித்துள்ளார்கள். ஆனால், அது எந்தளவுக்குச் சாத்தியப்படும் என்பது கேள்விக்குரிய விடயம், கடந்தகால அனுபவங்களை வைத்துப் பார்க்கும்போதே இது தொடர்பாக எமக்கு சந்தேகம் எழுகிறது எனத் தெரிவித்தார்.

புலிகளால் தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக இராணுவத்தளபதி- போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பாக, இன்று ஏதாவது பேசப்பட்டதா எனக் கேட்கப்பட்டதற்கு- இந்த விடயம் தொடர்பாக நாம் படைத்தரப்பிற்குத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டமையால், அவ்விடயம் தொடர்பாகச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு- இன்று எமது மக்கள் மத்தியிலே சமூகச்சீரழிவுகள் மேலோங்கி வருகிறது. இதனைத் தடுப்பதற்குப் பொலிஸார் தம்மாலான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கேட்டிருந்தோம். அதற்குத் தாம் இயன்றவரை நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தனர் எனவும் செம்மணன் தெரிவித்தார். (ச)

# துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் ஆசிரியர்கள் உடனடியாகப் பதவியிலிருந்து நீக்கப்படுவர்!

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளில் மாணவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிபர், ஆசிரியர்கள், உடன் பதவியிலிருந்து நீக்கப்படுவர் என கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பாடசாலைகளில் மாணவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகங்களில் அதிபர்கள், ஆசிரியர்கள் ஈடுபட்டு வருவதான முறைப்பாடுகள் கிடைத்துள்ளமை தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இது குறித்து தெரிவித்ததாவது,

கடந்த வருடம் பத்துக்கு மேற்பட்ட பாடசாலைகளில் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவற்றில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுவது வருத்தத்திற்குரியதாகும். ஒழுக்கம், பண்பாடு பற்றி மாணவர்களுக்குப் போதிக்க வேண்டிய ஆசிரியர்களும், அதிபர்களும் தகாத செயல்களில் ஈடுபடுவது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

இத்தகைய செயல்களின் அதிகரிப்பு குறித்து பல்வேறு சிறுவர் நலன்பேணும் அமைப்புக்களும் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன.

இவர்களின் முறைப்பாட்டையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(ப)

# புற்றுநோய் வைத்தியசாலை மீண்டும் செயற்படவுள்ளது!

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் முன்னர் இயங்கிவந்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை- கதிரியக்க உபகரணங்களைக்கொண்டு மீள இயக்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக, மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலையை இயங்கவைப்பதற்கு வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தன முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். இதற்கு வேண்டிய கதிரியக்கக் கருவிகளைப் பெறுவதற்கு - 100 மில்லியன் ரூபாவையும், வெளிநோயாளர் பிரிவு மற்றும் விடுதிகளைப் புனரமைப்பதற்கு - 11 மில்லியன் ரூபாவையும் உலகவங்கி வழங்கியுள்ளது.

கட்டட நிர்மாண வேலைகளை யாழ். மாவட்ட கட்டடத் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளதுடன், கதிரியக்க உபகரணங்களையும் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வைத்தியசாலைக்குப் புற்றுநோய் வைத்திய நிபுணர்கள், கதிரியக்க தொழிநுட்பவியலாளர்களை வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

இதேவேளை, கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் சேதமடைந்த மண்டைதீவு அரசினர் மத்திய மருந்தகத்தையும், அதனோடு இணைந்துள்ள பிரசவ விடுதியையும் புனரமைப்பதற்கு நிகொட் திட்டத்தின் கீழ் 80 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாண சுகாதார சேவைகள் பணிமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (09)

**1974 ஆம் ஆண்டு தை மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின்போது, ஏற்பட்ட அனர்த்தங்களின் விளைவாக கொல்லப்பட்ட ஒன்பது பொதுமக்களினதும் முப்பதாவது ஆண்டு நினைவுதினம் இன்றாகும். அதனையொட்டி இம் மாநாட்டில் சிறுபையனாக கலந்துகொண்ட எழுத்தாளர் இரவி அருணாசலத்தின் அனுபவம் இலக்கிய வடிவாக இங்கு பிரசுரமாகிறது.**



# அந்த நாட்களின் நினைவில்...

நான் அந்த நாட்களை நினைவுகூருகிறேன். எனக்கு அப்போது 13 வயது ஆகிவிட்டது. என்றாலும், அப்பாவின் கையைப் பிடித்தபடி நான் போனோன். 1974 ஆம் ஆண்டு தைமாதம்- குதூகலமாக இருந்த பொழுதுகள் அவை. சொல்ல வரும் கதைக்கு முந்தைய மாரிகாலத்தில் நிறைய மழை பெய்திருந்தது. வயல் எங்கும் வெள்ளம், தோட்டம் நிறைந்த சேறு, வெள்ளத்தில் மிதந்து பாம்பு வரலாம். என்றாலும், அம்பனை வயல் வெளிக்குள் புகுந்து மரவள்ளிக்கிழங்கு பிடிங்கினோம். கத்தரிக்காய்கள் ஆய்ந்தோம். வெள்ளம் வாழையை ஒனறும் செய்துவிடாது என்றாலும், வசந்தன்- மொரந்தன் வாழைக் குலையில் இருந்தும் காய்களைப் பிடிங்கினான். வெள்ளம் வந்து வயல்நிறைய விளைந்துபோயிற்று. ஆறுகள் பெருக் கெடுத்த காலம் என்று சொல்லச்சுகம். ஆனால், ஊரிலோ ஆறு இல்லை. வழுக்கியாறு என்ற பெயரில் வாய்க்காலாகப் பாய்கின்றது. மாரிகாலத்தில் மழை ஓடும். மற்றைய காலங்களில் மணலோடும் நாங்கள் ஓடுவோம். ஊரில் கிணறுகள் நிரம்பி வழிந்தன. மனமும் குதூகலத்தால் பொங்கிக்கிடந்தது.

மாரியில் பெய்த மழை தையில் மிகப்பனி பெய்ய வைத்தது. விடியஎழுகிறபோது, பனி எழும்ப விடவில்லை. குளிரெடுத்துப் போர்த்துக்கிடந்தோம். போர்த்துக் குடங்கிக் கிடக்க முடியாத நாட்கள் வந்தன். அவ்வளவு சந்தோஷமாக இருந்தது. ஏனென்றால் வீதிகள், வாழைகள் கட்டித் தோரணம் போட்டிருந்தன. சந்திக்குச்சந்தி சிகரங்கள் கட்டிக்கிடந்தன. கடைகளின் முன்னால் சப்பரங்கள் கட்டியிருந்தன. வீடுகளில் வாசல்களிலும் மாவிலை தோரணங்களுடன், பூரண கும்பங்கள் காத்திருந்தன. காரணம் என்ன? ஒரு விழா! யாருக்கு விழா? எங்களுக்கு, எங்கள் தாய் மொழிக்கு, தமிழ் மொழிக்கு விழா நடந்தது. அந்த நாட்களில் மனநிலையில் நாங்கள் புளகித்து போயிருந்தோம். "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு. பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிசமென்று சங்கேமுழங்கு. தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" இவ்வாறான வாக்கியங்கள் எம்மனதில் ஆழப்பதிந்த சிறுபராயமது. ஆகவே இந்த நிகழ்வில் நாங்கள் ஆனந்தப்பட்டோம்.

காலையில் குளிர், மாலையில் குளிர், மதியத்தில் வெயில், இலந்தை மரம் பிஞ்சுவைத்து காய்க்க ஆரம்பித்தது. ஒரு பழம் கிடையாதோ என்று ஊர் எங்கும் தேடினோம். பொழுது குதூகலம் நிறைந்துபோனது தெரியாமல் இருந்தது. தமிழுக்கு விழா என்றால் தயங்குவோமா? 1968 ஆம் ஆண்டு தமிழ்நாடு - சென்னையில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டின் திரைப்படக்காட்சி சிவாஜி நடித்த "ஊட்டி வரை உறவு" படத்துடன் காட்டப்பட்டது. அதற்காகச் சங்கானை மணிமகால் தியேட்டரில் ஊட்டிவரை உறவு படம் பார்த்தோம். அவ்வளவு வெறி இருந்தது. நம் நாட்டில் அந்த விழா நடந்தால் சும்மா இருப்போமா? அப்பாவை இழுத்தேன். அம்மா வரமாட்டேன் என்றா. அக்காவும் நானும் சிவமும் அப்பாவின் கையைப் பிடித்துப் போனோம். விழாவைப் பார்த்தோம். புளகித்திருந்தோம். அப்படியே ஞாபகம் இருக்கிறது. சிறுகணமாவது மறந்துபோய்விடவில்லை. எம் உள்ளமெல்லாம் தமிழ் பொங்கிப் பொங்கி வழிந்தது. எனக்கு என்னவோ இப்போதும் தோன்றுகின்றது. தமிழ் அப்போதுதான் நம் நெஞ்சைத் தொட்டுவிட்டகாலம். அது காலவரைக்கும் தமிழ் ஒரு மொழியாக இருந்தது. மொழியாக மாத்திரம் இருந்தது. பிறகுதான் அது எங்களின் அடையாளம் ஆகியது. உணர்வாகி உயிரில் ஒன்றாய் கலந்தது. நான் தமிழர் என்கின்ற உறுதியில் ஒருப்பட்டுப்போனோம். இந்த நாட்களில் தான் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அப்பாவின் கையைப் பிடித்து நான் சென்றேன். ஒருநாள் அது ஊர்வலம் சென்றது. ட்ரக்ரர் லொறிகளில் பலவித உருவங்கள் வடிவங்கள், நாடகங்கள், தமிழ் உணர்வைச் சொல்லுகின்ற அனைத்து அம்சங்களும் ஊர்வலமாய் சென்றன. கஸ்தூரியார் வீதிச் சந்தியில் நின்று பார்த்தோம். வின்சர் தியேட்டர் சந்தியில் ஓடிப்போய் பார்த்தோம். பொச்சம் அடங்கவில்லை. பரமேஸ்வராச் சந்தி அடியாலும் ஊர்வலம் போகின்றது என்றார்கள். அங்கும் ஓடினோம், பார்த்தோம், பரவசப்பட்டோம். காலில் ஒரு உணர்வு புகுந்தது. நான் நினைக்கின்றேன் கால் நடக்கத்தொடங்கியது. கால்களை இறுக்கமாக ஊன்றினேன். நான் உணர்வுகளை உடனேயே காட்டிவிடுவேன். நான் அழுவேன் அது சோகத்தால் அல்ல. துன்பம் நேர்ந்தும் துடித்துப்போயும் அழுததில்லை. ஒருபோதும் அழுததில்லை. ஆனால் இந்த நேரம் அழுதுவிடுவேன். அப்படி ஒன்றும் நடக்கவில்லை. கால்கள் நடக்கத் தொடங்கின. இறுக்கமாக ஊன்றினேன். இல்லை, உணர்வுதான் வென்றது. அப்படித்தான் நான் சொல்லவிரும்புகின்றேன். இப்போ கால்கள் நடுங்கவில்லை. காலால் நிலத்தைக் குத்திநின்றேன். ஐயோ, அந்த உணர்வை எப்படிச் சொல்வேன்? வார்த்தை வரவில்லை. என் கையைப் பிடித்திருந்த என் அப்பாவின் கை உறுதியாக இருந்தது. அப்பா தன் கையால் எனக்குச் செய்தி சொன்னார். நான் என் கால்களால் இந்தப் பூமிக்கு என் தாய் நிலத்திற்கு செய்தி அனுப்பினேன். அந்த உணர்வினை என்னால் இப்போது சொல்லிவிட முடியவில்லை. அன்றிரா உணர்வுகள் தளம்பி நிற்க, அரிக்கன் லாம்பு வெளிச்சம் தந்த வீட்டை அடைந்தோம். முற்றத்தில் குளிர்வீச அம்மாவிற்கு அன்றைய புதினம் சொன்னோம் அடுத்தநாள், அப்பாவிடம் நான் வில்லங்கப்படுத்தினேன். நெருக்குவாரம் கொடுத்தேன். கடைசிநாளும் போகவேண்டும் என்றேன். கடைசி நாளில்தான் விழாவின் உச்சம் என்று எனக்குத் தெரியும். அப்பாவை நான் விடவில்லை அப்பா ஓம் என்றார். அப்பாவும் நானும் போனோம். இரவில் யாழ்ப்பாண நகரில் நின்றோம்.

வாழைகள், தோரணங்கள், சிகரங்கள், சப்பரங்கள் எல்லாம் இருந்தன. மூங்கில் மரங்களும் சவுக்கு மரங்களும் கட்டப்பட்டு இருந்தன. அந்த மரங்களில் கலர் பல்புகள் தொங்கின. விட்டுவிட்டு எரிகிற லைட்டுகள் இருந்தன. பனிக்குளிர் வீசுகிற நேரம் நான் மகிழ்வில் மிதந்தேன். நான் திரும்பவும் சொல்வேன் எல்லாரும் மகிழ்வாக இருந்தனர். மகிழ்வாக இருந்தனர். இன்று மாத்திரமல்ல உணர்வாக இருந்தனர். எனக்கு அது நன்றாகவே தெரிகின்றது. லைட் வெளிச்சத்தில் ஒவ்வொரு முகங்களும் அப்படி மின்னின. றீகல் தியேட்டரின் முன்னே போகிறோம். வீரசிங்கம் மண்டபத்தின் முன் வருகின்றோம். முற்றவெளியில் நிற்கின்றோம். கூட்டம் நடைபெறுகின்றது. பார்ப்பதற்கு முடியவில்லை. நான் சிறுவனாக இருந்தேன். என் உயரம் ஒருவரையும் காட்டமுடியாது இருந்தது. எட்டிப் பார்க்க என் கால் விரல்களின் நுனிகள் வலித்தன. அப்பாவால் என்னைத் தூக்குவதற்கும் ஏலாது. ஒலிபெருக்கிதான் ஒரே உதவி. ஒலிபெருக்கியிலிருந்து சத்தம் கேட்கிறது. இல்லை திரும்ப ஞாபகம் கொள்கின்றேன் ஒலிபெருக்கியும் நிப்பாட்டப் பட்டதுபோல, இருக்கின்றது. இல்லை எனக்கு சொல்லவே முடியவில்லை. ஒலிபெருக்கி இருந்ததா? இல்லையா? என்னவோ வார்த்தைகள் தெளிவில்லாமல் குழப்பமாக வந்தன. அப்படித்தான் சொல்லமுடிகின்றது. எனக்கு உணர்வுகள் எழுந்து கொண்டு இருந்தன. அப்பாவின் கையில் பனிக்குளிரிலும் வியர்வை பிசுபிசுத்தது. பண்ணைக் கடல் பக்கம் பொலிஸ் நிலையம் இருந்தது. பண்ணைக்கடலில் இருந்து காற்றுப்பரவி இருந்தது. காற்று ஏதோ சேதியை ஊரெங்கும் பரவிவிட்டிருந்தது. இவ்வளவும் தான் என்னால் இப்போதைக்குச் சொல்லமுடிகின்றது. பிறகு என்ன நடந்தது? தமிழைப் பேசுவதன்றி தவறென்ன செய்தோம் என்று கேட்கிற மாதிரி பிறகு சில சம்பவங்கள் நடந்தன.

தமிழுக்கு ஒரு விழா எடுத்தோம். அவ்வளவு தான் செய்தது. அதற்கு ஒரு அனர்த்தம் நடந்தது. லைட்டுகள் திடீரென்று நின்றன. லைட் போஸ்டுகளில் இருந்து வயர்கள் அறுந்து விழுந்தன. அப்படித்தான் எனக்குத் தெரிந்தது. மின்னி மின்னி எரிந்தது. நெருப்புத் தணல்கள் பறந்தன. அப்பா ராசா ராசா என்று கையை இறுகப்பிடித்தார். இழுத்துக்கொண்டோடினார். துவக்கு வெடிச்சத்தங்கள் கேட்டன. எப்போதாவது ஊரில் வேட்டையாடியபோது கேட்ட ஒரு வெடிச்சத்தம்தான் அல்லது விசர்பிடித்த நாயைச் சுடுகின்றபோது, கேட்ட வெடிச்சத்தம் தான். இப்போதென்றால் தொடர்ந்தும் வெடிச்சத்தம் கேட்கிறது. வேட்டைக்காரர் வந்துவிட்டனர். அல்லது விசர்நாயை சுடுவதற்கானவர்கள் வந்துவிட்டனர். வெள்ளையாக குண்டுகள் வீழ்ந்து வெடிக்கின்றன. கண்கள் எரிகின்றன. வெறும் புகைக்கு இப்படி எரியாது. ஊரில் குப்பையைத் திரட்டிக் கொளுத்திய போது கண் எரிந்ததுதான். நாவூறு என்று செத்தல் மிளகாயும், வேப்பிலையும்போட்டு எரித்து என்னை அதில் துப்பச்சொன்ன போது பரவிய மிளகாய்ப் புகை கண்ணை எரித்ததுதான் எனறாலும், இப்படிக்கண் எரிந்ததில்லை. இதுவென்றால் நன்றாக எரிந்தது. கண் எரிய எரிய அப்பா இழுத்துக்கொண்டு ஓடுகின்றார். இழுத்த இழுப்புக்கு கால் தடுக்கப்பட்டு ஓடுகின்றேன். எங்கே ஓடுகின்றோம். தெரியாது? அப்பாவை நான் இழுத்துக் கொண்டு வந்தேன். இப்போது அப்பா என்னை இழுத்துக் கொண்டு ஓடுகின்றார். திடீரென்று ஒரு குழிக்குள் அப்பா விழுகின்றார். அப்பா அப்படி விழுந்தால் நான் விழாமல் விடுவேனா? விழுந்தேன். தலைகுப்புற விழுந்ததாக ஞாபகம். சேறு அப்பியது. மாரியில் நல்ல மழை பொழிந்திருந்தது. அதனை முன்னரே சொல்லிவிட்டேன். அதன் சேறு இப்போ என்னிடம் சொல்லாமல் அப்பிக்கொண்டது. அப்பாவிற்கும் அப்பியிருக்கும். இருட்டில் அது தெரியவில்லை. சேற்றுக்குள் அப்படியே இருந்தோம். அந்தக்குழிக்குள் பொத்துப் பொத்தென ஆட்கள் விழுகின்றார்கள். விழுகிற விதத்தில் தெரிகிறது. அது குழியல்ல வெள்ள வாய்க்கால். வெள்ள வாய்க்காலுக்குள் நாங்கள் கிடக்கின்றோம். அப்பா 'ராசா ராசா' என்று முணுமுணுக்கின்றார். முதுகைத் தடவுகின்றார். அப்பா வேறொன்றும் சொல்லவில்லை. பசிக்குதோ? என்று கேட்கவில்லை. கேட்டிருந்தால் ஓமென்று சொல்லியிருக்க மாட்டேன். பயப்பிடுகிறியோ என்று அப்பா என்னைக் கேட்கவில்லை. கேட்ருந்தால் ஓமென்று சொல்லியே இருக்க மாட்டேன். அப்பா செய்தது அவ்வளவும்தான். முதுகைத் தடவுகின்றார். இருட்டுக்குள் அப்பாவின் கை முதுகில் இருந்தது. கழுத்தில் வந்து பிடரிதடவி முகத்தைத் தொடுகின்றது. எனது இரு கண்களையும் தடவிப்பார்க்கின்றன அப்பாவின் கைவிரல்கள். அப்பா நான் அழேல்லை என்று முணு முணுக்கின்றேன். 'நோகுதோ ராசா' என்கிறார். 'ஓமப்பா' என்றேன். எல்லாம் நோகுது என்றேன். அப்பா ராசா என்று விம்மினார் என நினைக்கின்றேன். விடிகிறபோது வெளிச்சம்வந்தது. அப்பா கல்லு வைத்து சுவரில் ஏறுகிறார். என்னைக் கைபிடித்து ஏற்றினார். வேறு வழி பிடித்து பஸ்ஸ்ராண்டிற்குப் போனோம். பஸ் ஒன்றும் இலலை. அப்பா நடப்பம் என்றார். 10 மைல் வீடு நடந்தோம் குளம் தாண்டி, வயல்தாண்டி, கோயில் தாண்டி வீடு ஏறினோம். வாசலில் கால் வைத்தோம். எம் கோலம் கண்டு அம்மா ஐயோ என்று குழறினா. ஊரும் நாடும் ஐயோ என்று குழகின்ற நாட்கள் அன்றிலிருந்து தொடங்கிவிட்டன.

**ஒரு கல்விக்களச் சுற்றுலா அனுபவக் கட்டுரை** **- பகுதி IV -**

# இன முரண்பாட்டின் விளைவுகள்; ஆய்வுக்கு தயார் நிலையில் வட பகுதி...

(நேற்றையதொடர்ச்சி)

இவற்றைத் தடுக்க உங்களது அமைப்பு முயற்சிக்கலாம் தானே என்ற கருத்தை எமது மாணவன் நிலாம்டீன் முன்வைத்தபோது- இது குறித்து கருத்துத் தெரிவித்த மாணவர் பேரவையினர், தாங்கள் இது சம்பந்தமாக சில நடவடிக்கைகள் எடுத்துவருவதாகவும், இது குறித்து முஸ்லிம்களுடன் நேர்மையாக ஒத்துழைக்க உள்ளதாகவும், தமது தலைவரும் இது விடயத்தில் தெளிவுடனிருப்பதாகவும், தமது தலைவர் சொல்லாத ஒன்றை தாங்கள் செய்தால் அது அமைப்பின் கோட்பாட்டிற்கு முரணானது என்றும், எனவே கிழக்கில் தமது கோட்பாட்டிற்கு எதிராக ஏதாவது நடந்தால் தம்முடன் தொடர்பு கொண்டு செயற்பட்டால்தாம் அது குறித்து நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தனர்.

தீர்வு யோசனைகள் வெற்றி பெறாதபோது, மீண்டும் யுத்த சூழ்நிலைக்குத் திரும்பும் எண்ணம் விடுதலைப் புலிகளிடம் உள்ளனவா என்று உதவி விரிவுரையாளர் ஏ.சர்ஜுன்- புலிகளின் அரசியல்துறை மகளிர் பிரிவுத் தலைவியிடம் கேட்டபோது- முடிந்தவரை தீர்வு முயற்சியை சிறப்பாக்க விடுதலைப் புலிகள் முயற்சிப்பார்கள் என்றும், தமது மக்களின் நீண்ட கோரிக்கைகளுக்கு ஓரளவேனும் இசைந்து கொடுத்து, அவர்களின் இயல்பு வாழ்வைக் கட்டியெழுப்ப உதவாத எந்தத் தீர்வுத்திட்டமும், எமது மக்களை ஏமாற்றுவதாக அவர்களின் பெரும்பான்மையினர் கருதுமிடத்து, மக்களின் கருத்துக்களுக்கு நாங்கள் செவிசாய்ப்போம். நாங்கள் எமது மக்களுக்காகவே போராடுகிறோம். மீண்டும் யுத்தம் புரிவதற்கு இலங்கை அரசாங்கம் எங்களை நிர்ப்பந்தித்தால் அதற்கும் நாங்கள் தயாராகவுள்ளோம். அதற்குண்டான பலம் தம்மிடம் உள்ளது என்றும் தனது கருத்தை அவர் முன்வைத்தபோது, அவவாறான ஒரு யுத்தம் பேரழிவை ஏற்படுத்துமே என்று விரிவுரையாளர் மீண்டும் கேட்டதற்கு- இதுவரையில் நாங்கள் அதிகம் தியாகம் செய்திருக்கிறோம், தியாகம் இல்லாது வெற்றியில்லை என்ற கருத்தை அவர் திடமாக முன்வைத்தார்.

இறுதியில் விரிவுரையாளர் எம்.ஏ.ஜப்பார் சர்வதேச பேரவையினருடனான கலந்துரையாடலின்மூலம், தமது விரிவுரையாளர்களும், மாணவர்களும் பல தெளிவுகளைப் பெற்றுள்ளனர் என்றும், யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியல் துறையினருடன் சேர்ந்து, தமது பல்கலைகழகத்துடன் இவ்வாறான சமரச கலந்துரையாடலுக்கு வருமாறும் அழைப்பு விடுத்ததுடன், தமது நன்றிகளையும் தெரிவித்தார். பதிலுக்கு கருத்துத் தெரிவித்த தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன்- தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு நாங்கள் சென்றுபேச நினைத்திருக்கையில், உங்களின் வரவு எங்களை மகிழ்வித்திருக்கிறது. இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும். நாம் தொடர்ந்தும் பேச முயற்சிக்க வேண்டும். முஸ்லிம் அரசியல்வாதிகளை நீங்கள் சிறப்பாக வழிநடாத்த வேண்டும். ஏனெனில், சில வேளைகளில் அவர்களின் கருத்துக்கள் ஆத்திரமூட்டுவனவாகவுள்ளன. நங்கள் முழு முஸ்லிம்களின் கருத்துக்களையும் பிரதிபலிப்போராக மாற வேண்டும். என்றதோடு முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக எமது தலைமைத்துவம் எந்த செயற்பாட்டையும் செய்யாது என்ற நம்பிக்கையோடு செல்லுங்கள் என்றுகூறி எங்களை வழியனுப்பினார்.

உண்மையில் தென்கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர்களுடனும், மாணவர்களுடனும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் மனம் திறந்து கருத்துக்களை பரிமாறினர்.

அவர்களின் குளிர்பான விருந்தோம்பலும் எம்மை மனம் குளிரச்செய்தது. தராளமாக எங்களுடன் புகைப்படங்களை எடுத்துக்கொண்டனர். அவர்களிடம் இருந்து விடைபெற்றபோது, விடுதலைப் புலிகளுடன் சரிசமமாகவிருந்து கலந்துரையாடியது போன்ற ஒரு மனநிறைவு எல்லோரிடமும் தெரிந்தது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினருடனான கலந்துரையாடலையடுத்து, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட நாங்கள் புறப்பட்டோம். முதலில் கோப்பாயிலுள்ள விடுதலைப்புலிகளின் மாவீரர் துயிலும் இல்லத்தை பார்வையிட்டோம். தமிழழ விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த விடுதலைத் தியாகிகளின் அடக்கஸ்தலங்களும் நினைவுத் தூபிகளும் கால ஓட்டத்திற்கேற்ப கட்டப்பட்டுள்ளன. இப்பொழுதுதான் பூந்தோட்டங்களை நடுகிறார்கள் என நினைத்தோம். ஆனால், ஒரு காலத்தில் பூஞ்சோலைகளால் அலங்கரித்த அந்த மாவீரர் துயிலும் இல்லத்தை அரச படையினர் யாழ்.குடாநாட்டை கைப்பற்றியபோது சின்னாபின்னப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை அறிந்தபோது, உள்ளங்கள் துக்கத்தால் வெதும்பின. *(தொடரும்)*



**எம்.ஏ.ஜப்பார் (விரிவுரையாளர்)**
**அரசறிவியல் பிரிவு,**
**சமூக விஞ்ஞானங்கள் துறை,**
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,**
**ஒலுவில்.**

## ஈராக்கின் திக்றிற் நகரத்தில்

# அமெரிக்கப் படையினரின் சுற்றிவளைப்பில் பதின்மூன்று சந்தேக நபர்கள் கைது!



பதவியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனின் நகரான திக்றிற்டில், அமெரிக்கப் படைகள் நடத்திய முற்றுகையின்போது 13 வரையான சந்தேகத்திற்கிடமானவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த முற்றுகையில் நூற்றுக்கணக்கான அமெரிக்கப் படையினர் கடமையில் ஈடுபட்டனர். நேற்றுக்காலை ஈராக்கிலுள்ள வெளிநாட்டுப் பணியாளர்களும், வர்த்தகர்களும் தங்கியிருந்த விடுதியொன்று ரொக்கட் தாக்குதலுக்குட்பட்டது. எனினும் இந்தத் தாக்குதலில் எவரும் காயமடையவில்லை என அந்த விடுதியின் சிப்பந்திகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சென்ற வியாழக்கிழமை அமெரிக்க ஹெலிகொப்டர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில், அந்தக் ஹெலியில் பிரயாணம் செய்த 9 பேர்வரை கொல்லப்பட்டிருந்தனர். பின்னர் சீ 5 எனப்படும் பொருட்களை ஏற்றியிறக்கும் விமானமொன்றின் இயந்திரம் இயங்கமறுத்ததினால், புறப்பட்ட சிறது நேரத்தில் அது தரையிறக்கப்பட்டது.



மேலும், நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் சம்பந்தப்பட்டிருந்த ஹெலிகொப்டர் அமெரிக்கப் படையினருக்கான மருந்துவப்பணியில் ஈடுபட்டிருந்தபோது தாக்குதலுக்குட்பட்டது. ஹெலி விபத்தில் கூடுதலானவர்கள் மரணமடைந்தது இதுவே முதல்தடவையாகும். இந்தத் தாக்குதலின் எதிரொலியாகவே இந்த முற்றுகை மேற்கொள்ளப்பட்டது.

# எதியோப்பியாவில் உள்ள யூதர்களுக்கு இஸ்ரேல் புகலிடம் கொடுக்க முடிவு!

எதியோப்பியாவில் வாழும் 18000 இற்கும் மேற்பட்ட யூதர்களுக்கு, இஸ்ரேலில் புகலிடம் கொடுப்பதற்கு அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் சில்வன் சலோம தீர்மானித்துள்ளார்.

எதியோப்பியாவிற்கு 2 நாள் விஜயமொன்றை மேற்கொண்டிருந்த இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் சலோம் அங்குவாழும் பலசாமுரா என்ற யூத இனமக்களை அடுத்த மாத முடிவிலிருந்து இஸ்ரேலுக்கு குடிபெயர்வதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

எதியோப்பியாவிருந்து ஒரு தொகுதியான யூத மக்கள், 1991 ஆம் ஆண்டு குடிபெயர்ந்திருந்தார்கள்.

எதியோப்பியாவில் வாழ்ந்த மிகுதியான பலசாமுரா என்ற யூத இனமே தற்போது குடிபெயர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் 80000 இற்கும் மேற்பட்ட எதியோப்பிய யூதர்கள் - இஸ்ரேலில் தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

இதனிடையே, எதியோப்பியாவின் வெளிநாட்டமைச்சர் செயேனும் - மெஷ்பின் அதிகளவிலான யூத மக்கள் ஒரே நேரத்தில் வெளியேறத் தேவையிலலை எனவும், அவர்கள் இஸ்ரேலுக்குச் செல்வதற்கு கட்டுப்பாடுகள் எதுவுமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் எதியோப்பியாவில் யூதர்கள் வாழும் கொண்டார் பகுதிக்கு சலோம் சென்றிருந்தார். கிறிஸ்தவ மதத்திற்குத் தம்மை பலவந்தமாக மாற்ற எத்தனிப்பதாக அம்மக்கள் தெரிவித்திருந்தார்கள். யூதர்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் தமது இனத்தின் பிரதேசமான இஸ்ரேலில் வாழ்வதற்கு சட்டம் அவர்களுக்கு இடங்கொடுத்துள்ளது.

## ஈராக் பள்ளிவாசலில் குண்டுவெடித்து 5 பேர் பலி!



ஈராக்கின் மத்திய பகுதியிலுள்ள பள்ளிவாசல் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 5 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர். நேற்றைய தினம் பகூபா நகரிலுள்ள பள்ளிவாசலில் சனி முஸ்லிம்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதே இந்தக்குண்டு வெடிப்பு இடம்பெற்றது.




# ஈரான் பாம் நகரை புனரமைக்க 73 மில்லியன் டொலர் தேவை!

ஈரானில் பூமியதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட பாம் நகரத்தின் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு - செஞ்சிலுவைச் சங்கமும், ஐக்கிய நாடுகள் சபையும் இணைந்து 73 மில்லியன் டொலர் நிதியை, உலக நாடுகளிடமிருந்து கோரியுள்ளன. இந்த நிதியுதவி மூலம் புதிய கட்டடங்களை நிர்மாணிக்கவும், பாதிக்கப்பட்ட மக்களின் வைத்திய தேவைகளை ஈடுசெய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனிடையே உலக சுகாதார ஸ்தாபனம் 30 மில்லியன் டொலர்களுக்கு மேற்பட்ட பணம், சுகாதார சேவையை புனரமைப்பிற்கு தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

பாம் நகரில் அமைந்திருந்த வைத்தியசாலைகள் யாவும் பூமியதிர்ச்சியின்போது தரைமட்டமாகியுள்ளன. மேலும், சுகாதாரத்துறையில் உள்ள ஊழியர்களில் அரைப்பங்கினர் பூமியதிர்ச்சியின்போது மரணமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் மீண்டுள்ள மக்களில் அனேகமானவர்கள் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, உதவி வழங்கவுள்ள நாடுகள் ஜெனீவாவில் சந்தித்து நேற்று உரையாடத்திட்டமிட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டது.

40 இற்கு மேற்பட்ட நாடுகள் பூமியதிர்ச்சி நடைபெற்றவுடன் நிவாரணங்களை வழங்கியிருந்தது. ஆனாலும், கூடுதலான பணம் நீண்டகால புனர்நிர்மாணப் பணிகளுக்கு தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

## செவ்வாய்க்கு மனிதர்களை அனுப்புவதற்கு திட்டம்!



செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்புவற்கான தனது திட்டத்தை அமெரிக்க அதிபர் புஷ் அடுத்தவாரம் அறிவிக்கவுள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் நிரந்தரமாக செவ்வாய்க்கான விண்வெளி நிலையம் ஒன்றையும் அமைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் விண்வெளித்திடம், கொலம்பிய விண்வெளிக்கோள் எதிர்பாராத விதமாக வானில் வெடித்துச் சிதறியபின் தேக்கநிலை காணப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால், 10ஆண்டுகளுக்கு செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்பும் திட்டம் இருக்கவில்லை. மேலும் அண்மையில் கோள் ஒன்று வெற்றிகரமாக தரையிறங்கியபின் இத்திட்டம் அறிவிக்கப்பட்டது.

மேலும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் அண்மித்து வருவதும் ஒரு காரணமாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. செவ்வாய்க்கிரகத்திற்கு மனிதனை அனுப்பும திட்டத்தை தற்போதைய அமெரிக்க ஜனாதிபதியின் தந்தை 1989 ஆம் ஆண்டு பதவியில் இருந்தபோது தெரிவித்திருந்தார். ஆனால், நிதிப்பற்றாக்குறை காரணமாக அத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. மேலும் 30 ஆண்டுகளுக்கு முன்னர் சந்திரனுக்கு மனிதனை அமெரிக்கா அனுப்பியிருந்தது.

பூமியிலிருந்து சந்திரனை மூன்று நாட்களில் அடைந்துவிடலாம் ஆனால் செவ்வாய்க் கிரகத்தை அடைவதற்கு 6 மாதங்கள் தேவைப படுகின்றது. இதனால் புதிய தொழில் நுட்பத்தையும், அதன்மூலம் புதிய கண்டுபிடிப்புக களுக்கும் இது வழியமைக்கும எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விமானத் தாக்குதலில் இறந்தவர்களுக்கு 170 மில்லியன் டொலர் வழங்க லிபியா முடிவு





1989 ஆம் ஆண்டு சகாரா பாலைவனத்திற்கு மேலாக பறந்து கொண்டிருந்தவேளை, பிரெஞ்சு விமானமொன்று குண்டுத்தாக்குதலுக்குள்ளாகி 170 பயணிகள் மரணமடைந்திருந்தார்கள். இக்குண்டுத்தாக்குதலுக்கு லிபியாவே காரணமாக அமைந்ததென 1999 ஆம் ஆண்டு பிரெஞ்சு நீதிமன்ற விசாரணைகள் மூலம் அறிவிக்கப்பட்டு 6 லிபியர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. லிபியா, குண்டுத்தாக்குதலுக்கு தாம் பொறுப்பல்ல என அப்போது தெரிவித்திருந்தது.

தற்போது அக்குண்டுத்தாக்குதலில் மரணமடைந்தவர்களுக்கு நஷ்டஈடாக 170 மில்லியன் டொலர்களைக் கொடுப்பதற்கு அது சம்மதம் தெரிவித்துள்ளது.

மேற்கு நாடுகளுடன் உறவுகளை புதுப்பித்துக் கொள்வதற்கு லிபியா எடுத்துவரும் முயற்சிகளின் ஒரு அங்கமாகவே இந்த நஷ்டஈட்டுக் கொடுப்பனவு அமைந்துள்ளதாக இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

நஷ்ரஈட்டுத் தொகையை கொடுப்பதற்காக பரிஸில் ஒப்பந்தம் கைச்சாத்திடுவற்குத் தீர்மானித்துள்ளது. லிபியாவின் வெளிநாட்டமைச்சர் அப் ரெல் ராமன் சால்கம், பரிஸில் பிரெஞ்சு ஜனாதிபதி ஷிராக்கைச் சந்திக்கவுள்ளார்.

மேலும் பிரான்சின் செனட்சபை அங்கத்தவர் கிறிஸ்ரியன் பொன்செலெந், லிபியாவின் வெளிநாட்டமைச்சரை சந்தித்தபின் பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபை லிபியாவுக்கு எதிராக பொருளாதாரத தடையை நீக்குவதற்கு பிரேரணை ஒன்றைக் கொண்டுவ'ருவதற்கு முற்பட்டபோது, தமது விமானப் பிரயாணிகளின் மரணத்திற்கு நஷ்டஈடு தராதுவிடின் அப்பிரேரணையை எதிர்த்து வாதிட இருப்பதாக பிரான்ஸ் அறிவித்திருந்தது.

## ஊர்சுற்றி எழுதுவது

சிங்களவர்களும், தமிழர்களும் இந்தியாவிலிருந்துதான் வந்தவர்கள் என்பது சிலதினங்களுக்கு முன் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த அஸ்கிரிய மடாதிபதி செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்திருந்தார்.

இருதரப்பு மக்களுமே இந்தியாவிலிருந்து வந்தவர்களாகையால், இருவரும் யுத்தம் செய்வதைவிட்டு, ஒற்றுமையாக வாழலாம் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

இலங்கை சுதந்திரமடைந்ததிலிந்த காலத்திலிருந்து தமிழர்களின் தாயகமான வடக்கு - கிழக்கில் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றத்தை முதல் பிரதமந்திரி டி. எஸ். சேனநாயக்க தொடங்கினார். இலங்கையை உணவில் தன்னிறைவு காண்பதற்காக உணவு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, கிழக்கில் தூர்ந்துபோன குளங்களைத் திருத்தி, அப்பகுதிகளில் விவசாயம் செய்வதற்கு மக்களைக் குடியேற்றுவதாகச் சொன்னார்.

விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் டி. எஸ். ஆரம்பித்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் - கிழக்கில் திருகோணமலைப் பகுதியிலும், இங்கினியாகலை பட்டிப்பறை ஆற்றுப்பகுதியிலும் இன்று தமிழர்களுக்கு இடமில்லாமல் செய்துவிட்டிருக்கிறது.

இதனால்தான் டி. எஸ். சேனநாயக்காவுக்குப் பின் நாட்டின்மீது அக்கறை கொண்ட ஒரு தலைவரும் தோன்றவில்லை என்று மல்வத்தை மடாதிபதி கூறினார்.

1881 ஆண்டு குடிசனக் கணக்கெடுப்பின் பின் அறிக்கைப்படி நான்கைந்து சிங்களக்குடிகள் கூட இப்பகுதியில் இருந்ததில்லை. சில முஸ்லிம் குடும்பங்கள் தமிழருக்கு அடுத்து இருந்தன. இன்று கிழக்குடன் வடக்கு இணையவேண்டும் என்று சர்வஜன வாக்கெடுப்பு நடத்துங்கள் என்று சிங்களவர்களும் முஸ்லிம்களும் சவால் விடுகின்றனர்.

இதேசமயம் எக்ஸத் சிங்கள கோசபாவின் அரசியல் பிரிவான எக்ஸத் சிங்களக் கட்சி (ஐக்கிய சிங்களக் கட்சி) யின் பிரதித்தலைவர் ரஞ்சித் திஸநாயக்க என்பவர் "தி ஐலன்ட்" என்ற ஆங்கிலத் தினசரியில் பெரிய கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

பேராசிரியர் பொன் சக்திவேல் டி. சேனரத்தின என்பவர் எழுதிய கடிதத்துக்கு பதிலளித்து இப் பெரிய கடிதத்தை எழுதியிருக்கிறார்.

4000 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்ததாகத் தமிழர்கள் கூறுகின்றனர். 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் முஸ்லிம்கள் இருந்ததாக முஸ்லிம்கள் கூறுகின்றனர்.

இந்த நாட்டில் சிங்கள பௌத்தர்கள் ஒன்றேகால் இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருக்கிறார்கள் என்பதற்கு புதைபொருட்கள் உட்பட பல ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக ரஞ்சித் திஸநாயக்க சொல்கிறார்.

காங்கேசன்துறை முதல் பல இடங்களின் பெயர்களும் தமிழர்களால் தமிழ் பெயர்களாக மாற்றப்பட்டனவே அன்றி, இவைகள்யாவும் முன்னர் சிங்களப் பெயர்களாகவே இருந்தன என்று அவர் "ஐலன்ட்" பத்திரிகையில் எழுதிய கடிதத்தில் பட்டியலிட்டு கூறியிருக்கிறார்.

போத்துக்கீஸியரும், ஒல்லாந்தரும் இலங்கையைக் கைப்பற்றியபோது இலங்கையில் முன்னர் இருந்த ராஜதானிகளையும் எல்லைகளையும் மாற்றியமைக்கவில்லை.

இவர்களின் பின் வந்த பிரித்தானியர்தான் தங்கள் நிர்வாக வசதிக்காக எல்லைகளையும் மாற்றி, மாகாணங்கள் என்று பிரித்து, பழைய ராஜதானிகளையே இல்லாமல் செய்தனர்.

அவர்கள் இலங்கையின் ஆட்சியை சிங்களவர்களிடம் கையளித்ததன் விளைவு இன்று இலங்கையில் தமிழர்களே இருந்ததில்லை என்று வரலாற்றையே புரட்டுகிறார்கள்.

புதைபொருள் ஆராட்சி பற்றியும் அவர்கள் பேசுகிறார்கள்.

இப்பொழுது புதிதாக வடக்கிலும் கிழக்கிலும் புதைபொருள் ஆராட்சி செய்ய வேண்டிய அவசியத்தை கோப்பாயில் ஒரு வீட்டு வாசலில் இருதினங்களுக்கு முன் கண்டெடுத்த இளம்பெண்ணின் எழும்புக்கூடும், பல சேலைகளும் செருப்புகளும் எடுத்துக்காட்டுகின்றன.

கிளிநொச்சியிலும் வேறு பல இடங்களிலும் வடக்கிலும் கிழக்கிலும் எழும்புக்கூடுகள் ஆங்காங்கே கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

இராணுவ முகாம்கள் (இந்திய-இலங்கை) இருந்த இடங்களில் தோண்டினால் இன்னும் பல எழும்புக்கூடுகள் கிடைக்கலாமோ.

இராணுவ முகாம்கள் இனியும் இங்கு இருப்பது பின்னாளில் புதைபொருள் ஆராட்சி செய்வதற்காகத்தானா?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland



நாற்சந்தி

"என்னமணியம் என்ன ஒரே கடுப்பாய் இருக்கிறாய் என்ன நடந்தது..."

"என்ன நடந்ததோ... எதிர்வீட்டு ஏகாம்பரம் எங்கடைவீட்டு மதில்கோடியில் வந்து தன்ரை வீட்டு குப்பையைக் கொட்டிப்போட்டுபோட்டார்..."

"அதுக்கென்ன இப்ப... அவற்றை காணிக்குள்ள கொட்டவோ, எரிக்கவோ இடமில்லை... பாவம்... மதில் கோடியில் தானே அதுவும் வெளியில தானே கொட்டியிருக்கிறார்...

"அதுக்கென்னவோ... உனக்கென்ன விசரே கனகு... அந்த குப்பையில் கிடந்த செத்த எலி ஒன்றை காகம் ஒன்று தூக்கி வந்து என்ரை கிணத்துக்கை எல்லே போட்டிருக்கு..."

"காகம் போட்டதுக்கு அந்தாள் என்ன செய்யமுடியும்"

"கனகு கேந்தியை கிளப்பாதை... நான் இப்பதான் முன்நூறு ரூபா கொடுத்து கிணத்தை இறைச்சிட்டு வாறன்... எனக்கெல்லே தெரியும் என்ரை வயித்தெரிச்சல்..."

"செத்த எலியை என்ன செய்தாய்... வெட்டித் தாட்டனியே..."

"எனக்கென்ன எலிக்கு இறுதிக்கிரியை செய்யுறதே வேலை அதை ஒரு பொலித்தீன் பையிலை போட்டு இந்த மதவுக்கடியிலை போட்டிட்டுத்தான் வாறன்..."

"இனி அதை எந்தக்காகம் ஆற்றைவீட்டுக் கிணத்துக்கை போடப் போகுதோ... கடவுளே..."

"உதுக்கேன் கடவுளைக் கூப்பிடுகிறாய்... கனகு... அங்கே உன்ரை பேரன வாறான்"

"தாத்தா எங்கடை கிணத்துக்கை ஆரோ செத்த எலியை பொலித்தீன் பையிலை போட்டு வீசியிருக்கினம்... ஒரே மணமாக இருக்கு... அம்மா உங்களை வரட்டாம்...! என்றான் பேரன்

மணியத்தை அந்த இடத்திலை காணவேயில்லை

-தெருவோரி

# ஜே.வி.பியின் வற்புறுத்தலுக்கு இணங்க பொதுத்தேர்தலுக்கு ஜனாதிபதி தயார்!

## நேற்றைய கூட்டத்தில் முடிவு

பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை முதலமைச்சர்களுக்கான கூட்டம் ஒன்று, ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நேற்றுமாலை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இனிமேல் ஜே.வி.பி கூட்டணி வைப்பதென்றால் அது பொதுத்தேர்தல் நடந்தால் மாத்திரமே சாத்தியப்படுமென நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

எனவே இது தொடர்பாக ஆராயவே நேற்றைய கூட்டம் ஜனாதிபதியால் நடத்தப்பட்டுள்ளது.

மாகாணசபை தேர்தலை முதலில் நடத்த பொதுஜன முன்னணியுடன் உடன்பாடொன்றுக்கு ஜே.வி.பி வரமுடியாதுபோனால் நேரடியாக பொதுத் தேர்தலுக்கே செல்லலாம் என ஜனா திபதி தெரிவித்துள்ளார்.

எனவே ஏப்ரல் மாதத்தில் மாகாணசபைத் தேர்தலுக்குப் பதிலாக பொதுத்தேர்தல் நடத்தப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# சுவீடன் எம்.பிக்கள் குழு யாழ்., வன்னிக்கு வருகிறது

சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் யுனிசெவ் மூலம் வடபகுதியில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை பார்வையிடுவதற்காக சுவீடன் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆறுபேர் கொண்ட குழு, எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது.

யாழ்ப்பாணம் வருகைதரும் சுவீடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சிக்கும் விஜயம் செய்துதமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்திக்கவுள்ளனர்.

# தேசப்பற்று தேசிய முன்னணி திருமலையில் ஆர்ப்பாட்டம்

நாட்டை பிளவுபடுத்தும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசப்பற்று தேசிய முன்னணி சார்பில் திருகோணமலையில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

பி.ப. 2 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் திருகோணமலை நகரப் பகுதியில் இடம்பெறவுள்ளது.

இந்தஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பி. யின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, அர்ஜுன ரணதுங்க, ஜே.வி.பி. எம்.பி. சந்திரசேகரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளதாக தேசப்பற்று தேசிய முன்னணி அறிவித்துள்ளது.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1580 திகதி: 09.01.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| X | 9 | 6 | 9 | 7 | 8 | 7 |

# மனித உரிமை ஆணைக்குழுவால் படை அதிகாரிகளுக்கு கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

படை அதிகாரிகளுக்கான மூன்று நாள் கருத்தரங்கு ஒன்றினை கொழும்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு நடத்துகின்றது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்தக் கருத்தரங்கு இன்றுடன் முடிவடைகின்றது.

இராணுவ அதிகாரிகளுக்கு மனித உரிமைகள் தொடர்பான விளக்கங்களை அளித்தும், கைது செய்யப்படல், சித்திரவதை செய்யப்படல் போன்ற நடவடிக்கை தொடர்பாக விளக்கங்களைக் கொடுப்பதும், நடைமுறைச் சமாதானம் தொடர்பில் இராணுவ அதிகாரிகளுக்கு விளக்கம் அளிப்பதுமே இந்தக்கருத்தரங்கின் நோக்கம் என்று கூறப்படுகின்றது.

பொதுமக்கள் அரசியல் நகர்வுகள் ஊடாக நடைமுறைச் சமாதானத்தில் இராணுவவீரர்கள் எத்தகைய வேலைத்திட்டங்களைச் செய்யலாம் என்றும் ஆயுதப்படையினருக்கு மனித உரிமை ஆணைக்குழு விளக்கங்களை அளிக்கின்றது.

இந்தக் கருத்தரங்கின் மூலம் ஆயுதப்படையினர் செயற்படும் விதம் குறித்து எதிர்வரும் காலங்களில் மனித உரிமை ஆணைக்குழு ஆராய உள்ளது.

## சுகவீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் சாவு

சுகவீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளதாகப் புலிகளின் குரல் வானொலி நேற்று அறிவித்துள்ளது.

அரசடி நல்லூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கணேசையா விமலேஸ்வரன் என்ற நாட்டுப்பற்றாளன் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவடைந்துள்ளார். இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 193 தொண்டர்...

இரத்துச்செய்யப்படுகின்றன.

அத்துடன், மீண்டும் ஒரு நேர்முகத்தேர்வை நடத்தி, உரியவகையில் தொண்டராசிரியராகக் கடமையாற்றுபவர்களுக்கு இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது எனத் தெரிவித்துள்ளது. (01)

## பேச்சிலிந்து...

நிம்மதி வாழ்க்கையையும் பாதுகாக்கவேண்டியது பொறுப்பு வாய்ந்த பதவிகளிலுள்ள அனைவரினதும் கடமையாகும் என அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.குடா...

பகுதி பகுதியாக இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைகளைத் துரித கதியில் எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்பது தொடர்பாகவே விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்த மக்களின் நலன்களைக் கவனித்தல், வீடமைப்பு போன்ற திட்டங்கள் பிரதானமாக ஆராயப்பட்டதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

## சமாதான...

மக்களே பாரிய கஷ்டங்களை தொடர்ந்தும் அனுபவிக்க நேரிடும்.

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு பாதுகாப்புப்படை, பொலிஸ், சிறைச்சாலை சார்ந்த அதிகாரங்கள் அவசியமாகவுள்ளது. அவற்றை ஜனாதிபதி வைத்திருக்கும்போது பேச்சைத் தொடர்வது சிரமம்.

ஜனாதிபதியே தற்சமயம் பேச்சைத் தொடர்வது சாத்தியமானதாக இருக்கும்.

சமாதான முயற்சிகள் தடைப்பட்டிருப்பதால் வெளிநாட்டு உதவிகளும் தடைப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டே பேச்சுவார்த்தைப் பொறுப்பிலிருந்து விலக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சுசந்த பெர்னாண்டோவின் மோசடி விசாரணைகள் பூர்த்தியாம்!

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் முன்னாள் தலைவர் சுசந்த பெர்னாண்டோவிடம் இருந்து முழுமையான விசாரணைகளை முடித்துவிட்டதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

இதனையடுத்து சுசந்த பெர்னாண்டோவை விரைவில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் கேட்டுள்ளது.

சுமார் 3 கோடி ரூபாவை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் சுசந்த பெர்னாண்டோ கைது செய்யப்பட்டு இருந்தார். பின்னர், சுகயீனம் காரணமாக அவருக்கு பிணை வழங்கப்பட்டு இருந்தது.

பிணையில் இருக்கும்போதே கொடும்பு நீதிமன்றம் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் வாக்குமூலத்தைப் பெறுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்த வேண்டுகோளின் அடிப்படையில், லஞ்ச ஊழல் ஆணைக்குழு நேற்று விசாரணை முடிவுக்கு வந்துள்ளதாக அறிவித்துள்ளது. இதனடிப்படையிலேயே கொழும்பு நீதிமன்றம் அவரை நீதி மன்றத்தில் ஆஜராகும்படி கேட்டுள்ளது. (01)

# வவுனியா மாவட்டத்தில் விழிப்புக்குழுக்கள் அமைப்பு

வவுனியாவில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் கொலைச் சம்பவங்களைத் தடுக்கும் நோக்கோடு - தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறையினர் விழிப்புக்குழுக்களை அமைத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிராமங்கள்தோறும் அமைக்கப்பட்டுவரும் இந்த விழிப்புக்குழுக்களின் மூலம் பெண்களைக் கடத்துதல், கொள்ளைகளில் ஈடுபடல், பொதுமக்களை துன்புறுத்தல் முதலான நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுக்களைக் கட்டுப்படுத்த முடி[illegible]மெனப் புலிகள் நம்பிக்கை [illegible]வித்தே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இக்குழுக்களுக்கான விசேட கலந்துரையாடலின் பின்னரே அவர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# மீண்டும் பழைய முறைப்படியே ஓய்வூதியக் கொடுப்பனவு

## வஜிர அபயவர்த்தன தகவல்

மீண்டும் பழைய முறைப்படியே ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது என பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்தார்.

இந்த வருடம் முதல் அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியம் வழங்கும் முறையில் புதியமுறை களை அறிவிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தீர்மானித்திருந்தது. அதன்படி நேற்று முன்தினம் இதற்கான சுற்று நிருபத்தினை அரச திணைக்களங்களுககு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

எனினும், புதியமுறையில் உள்ள சில குறைபாடுகள் மற்றும் சிக்கல்கள் காரணமாக அதனைத் தற்காலிகமாக இடைநிறுத்திக்கொண்டு மீண்டும் பழைய முறைகளுக்கமையவே ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இந்த முறை ஓய்வூதியம் பெ[illegible]வோருக்கான 12 பற்றுச்சீட்டுக்களும் ஒரே தடவையில் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இதன்மூலம் தபால்செலவைக் குறைக்கமுடியும். பிரதமரின் ஆலோசனைக்கமையவே ஓய்வூதியப் பணிப்பாளர் பழைய சுற்று நிருபத்தை அமுல்படுத்தியதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்பு நீதிமன்ற...

துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபர் அங்கிருந்து தப்பிச்செல்ல முற்பட்டவேளை, அங்கு கடமையிலிருந்த இராணுவச் சிப்பாயால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, கொழும்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தக்கொலை தொடர்பான விசாரணைகளை கொழும்பு குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த உயரதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவரான சமிந்த உதயகுமார என ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்திருப்பதாக கொழும்பு - வாழைத்தோட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட தம்மிக்க அமரசிங்கவிற்கு போலி ஆவணங்களைத் தயாரித்து இங்கிலாந்தில் 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளைப் பார்வையிட அனுப்பியதாக, கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரான திலங்க சுமதிபால மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதும், அதற்கு அவர் முக்கிய சாட்சி என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய கொலையாக இது இருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகிறது.

## புலிகளின் பிரதிநிதிகளுடன்...

இராணுவத்தினரின் சார்பில் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில்சந்திரபால தலைமையில் முக்கிய இராணுவ உயர் அதிகாரிகளைக்கொண்ட குழுவும், யாழ்.மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரியும் கலந்துகொண்டனர்.

மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவித்தல், உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களினுள் மக்களை மீளக்குடியமர்த்தல், படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பொதுக் கட்டடங்கள், பாடசாலைகள் என்பனவற்றை விடுவித்தல் என்பன தொடர்பாக இந்தக் கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருமணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல் நிறைவு பெறுவதற்கு முன்னரே இராணுவத்தளபதி சுசில் சந்திரபால வேறு ஒரு கலந்துரையாடலில் கலந்துகொள்ளும் பொருட்டு வெளியேறினார். அவரிடம் செய்தியாளர்கள் கருத்துக்கேட்டபோது பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றபின் தன்னோடு தொடர்பு கொள்ளும்படியும், இந்தக் கலந்துரையாடலில் மூன்று தரப்பினரும் சம்பந்தப்பட்டுள்ளமையால் தன்னால் தனித்துக் கருத்துக் கூறமுடியாது எனவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் நிகழ்வைப் படம்பிடிப்பதற்கோ அல்லது அது தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்கோ போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினர் பத்திரிகையாளர்களை அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.